விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 325 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 23 வியாழக்கிழமை (09.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829






## நாட்டின் அமைச்சரை அச்சுறுத்தும் வகையில் திருடர் கும்பல் சக்தி வாய்ந்தது

### அமைச்சர் ரொஷான் சபையில் பரபரப்புத் தகவல்

(கொழும்பு)

நாட்டின் அமைச்சரை அச்சுறுத்தும் வகையில் திருடர் கும்பல் சக்தி வாய்ந்தது என விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியை யாரோ அழிக்க முயற்சிக்கின்றனர் என்பது தனக்கு நன்றாக தெரிகின்றது எனத் தெரிவித்த விளையாட்டுத்துறை அமைச் 02

## 4,324 குழந்தைகள் காசாவில் இதுவரை பலி

(காசா)

காசாவில் இடம்பெற்று வரும் மோதல் சம்பவங்களில் இதுவரை 4,324 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

காசா எல்லையில் இடம் பெற்றுவரும் தாக்குதல்களால் கடந்த சில நாட்களில் மாத்திரம் 241 பேர் 15

### அரச ஊழியர்களுக்கு

## சுமார் 10 ஆயிரம் சம்பள உயர்வு

(கொழும்பு)

2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு சுமார் 10 ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு கிடைக்குமென அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என ஜனாதிபதியும் 15

### சமஷ்டி முறைத் தீர்வே

# தமிழ் மக்களை வாழ வைக்கும்

### வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு

(யாழ்ப்பாணம்)

**சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வே தமிழ் மக்களை நிம்மதியாக வாழவைக்கும் என வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்துள்ளது.**

வடக்கு - கிழக்கு தமிழரின் இணைப்பாட்சி (சமஷ்டி) கோரிக்கையின் தோற்றம் தொடர்பான கண்காட்சி மற்றும் வரலாற்றுத் தெளிவூட்டல் நிகழ்வு யாழ்ப்பாணம் சங்கிலியன் பூங்காவில் நேற்று இடம்பெற்றது.

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் 15

### இலங்கை கிரிக்கெட்

## பாராளுமன்றில் இன்று வாக்கெடுப்பு

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் சபையின் அதிகாரிகளை பதவி நீக்குவது தொடர்பிலான ஒன்றிணைந்த யோசனையொன்றை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்ற கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

பாராளுமன்ற கட்சித் தலைவர்கள் 15

## யாழில் போதை விருந்து கண்டுகொள்ளாத பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் கடந்த 4ஆம் திகதி இரவு "DJ night" எனும் பெயரில்போதை விருந்து கொண்டாட்டம் ஒன்று இடம் பெற்ற விடயம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில் கொழும்பை சேர்ந்த நிறுவனத்தின் பெயரில் சிலர், சமூக வலைத்தளங்களின் ஊடாக அழைப்பு விடுத்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

அதன் அடிப்படையில் அன்றைய தினம் அங்கு வந்த சிலர் தாம் கொண்டு வந்திருந்த கஞ்சா, ஐஸ் போன்ற போதை பொருளையும் நுகரத் தொடங்கியுள்ளனர்.

ஹோட்டலில் மது 15

### அத்தியாவசிய சேவையாக

## தபால் சேவை பிரகடனம்

### விசேட வர்த்தமானி வெளியானது

(கொழும்பு)

தபால் சேவைகளை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தும் அதிவிசேட வர்த்தமாலை அறிவித்தல் நேற்று மாலை வெளியிடப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தபால் திணைக்களத்தின் வளங்களை விற்பனை செய்யும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு எதிராக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி நேற்று 15

## மகன் விஷம் அருந்தியதில் தந்தை அதிர்ச்சி மரணம்

### கோப்பாயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மகன் விஷம் அருந்தியதில் அதிர்ச்சியடைந்த தந்தை ஒருவர் மயங்கி விழுந்து மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் கோப்பாய் மத்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த முத்துத்தம்பி விவேகானந்தம் (வயது-70) என்பவரே உயிரி 15

### மத்திய மாகாணத்தில்

## திங்கள் பாடசாலை விடுமுறை

(கொழும்பு)

தீபாவளிபண்டிகையைமுன்னிட்டு எதிர்வரும்திங்கட்கிழமை மத்தியமாகாண தமிழ் பாடசாலைகளுக்கு 15

### கோப்பாயில் மோதல்

## 3 பெண்கள் உட்பட 23 பேர் கைதாகி மறியல்

(யாழ்ப்பாணம்)

மோதல் சம்பவத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கோப்பாய் மத்தி கிராமத்தை சேர்ந்த 3 பெண்கள் உள்ளிட்ட 23 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சமாதானத்திற்கு குந்தகம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் 15

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்றாக்கும் உங்கள் நாளிதழ்

# அநாகரிகமாக கருத்து வெளியிட்ட இராஜாங்க அமைச்சர் அஷோக பிரியந்த

## சபையில் ஆளும் – எதிரணியினர் வாக்குவாதம்

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி விஜேயரத்னவை நோக்கி, இராஜாங்க அமைச்சர் அஷோக பிரியந்த அநாகரிகமான கருத்தொன்றை வெளியிட்டார் என குற்றஞ்சாட்டி, பாராளுமன்றத்தில் நேற்று ஆளும். - எதிரணியினர் பெரும் சர்ச்சையில் ஈடுபட்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பிரான ரோஹினி குமாரி விஜேயரத்ன, ஓய்வூதியப் பிரச்சினை தொடர்பாக, வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன கருத்து வெளியிட்டார்.

நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் தொடர்ந்தாலும், அரச ஊழியர்களுக்கான ஓய்வூதியம் தடையின்றி வழங்கப்படுவதாக பிரதமர் தெரிவித்திருந்தார்.

எனினும், இவரது இந்தக் கருத்தானது பொய்யானது என தெரிவித்த ரோஹினி குமாரி விஜேயரத்ன, அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்க முடியுமாக இருந்தால், ஓய்வு பெற்றவர்களுக்கான ஓய்வூதியத்தை அதிகரிக்கவோ அல்லது உரிய ஓய்வூதியத்தை வழங்கவோ ஏன் அரசாங்கத்தினால் முடியாமல் உள்ளது என்று கேள்வி எழுப்பினார்.

இதனையடுத்து கருத்து வெளியிட்ட உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அஷோக பிரியந்த, இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக எதிர்வரும் 13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு- செலவுத் திட்டத்தில் தீர்வுகள் முன்வைக்கப்படும் என்று தெரிவித்ததோடு, பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேயரத்னவை மகிழ்விப்பது எவ்வாறு என தங்களுக்குத் தெரியாது என கருத்து வெளியிட்டார்.

இவர் இவ்வாறு தெரிவித்தவுடன், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவரது இந்தக் கருத்துக்கு கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல உள்ளிட்டவர்கள் இவரது கருத்துக்கு கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டு, இராஜாங்க அமைச்சரை சபையில் இருந்து வெளியேற்ற வேண்டும் என வலியுறுத்தினார்கள். (ம-7)

# தமிழக மீனவர்கள் நால்வருக்கு ஒத்திவைக்கப்பட்ட-சிறைத் தண்டனை

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த தமிழக மீனவர்கள் நால்வருக்கு 5 வருடகாலத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சாதாரண சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை ஏனைய 22 மீனவர்களையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதவான், ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட நான்கு மீனவர்களின் படகினை பறிமுதல் செய்யவும் உத்தரவிட்டார்.

நெடுந்தீவு கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து கடற்தொழிலில் ஈடுபட்டார்கள் எனும் குற்றச்சாட்டில் 26 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கடந்த 14ஆம் திகதி கைது செய்யப்பட்டனர். அதன்போது அவர்களின் மூன்று படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றி இருந்தனர்.

மறுநாள் 15ஆம் திகதி கடற்படையினர் கடற்தொழில் நீரியல் வள திணைக்களத்தினர் ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் 26 மீனவர்களையும் முற்படுத்தினர். அதனை அடுத்து மீனவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். அந்நிலையில் குறித்த வழக்கு நேற்று புதன்கிழமை மூன்றாவது தவணையாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, 26 மீனவர்களில் ஒருவர் மூன்று படகுகளில் ஒரு படகின் உரிமையாளர் என கண்டறியப்பட்ட நிலையில், அவரின் படகை பறிமுதல் செய்ய உத்தரவிட்ட நீதவான், அந்த படகில் இருந்த 4 மீனவர்களுக்கும் 5 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 18 மாத சிறைத் தண்டனை விதித்தார். ஏனைய 22 மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்க எதிர்வரும் 15 ஆம் திகதி வரையில் உத்தரவிட்டார். (ம-7,33)

# வடக்கிலுள்ள அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் கண் பரிசோதனை

## இலவசமாக கண்ணாடி வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் தை மாதம் வட மாகாணத்தில் இருக்கின்ற அனைத்து பாடசாலை மாணவர் களுக்கும் கண் பரிசோதிக்கப்பட்டு இலவசமாக கண்ணாடிகள் வழங்கப்படும் என கண் சிகிச்சை வைத்திய நிபுணர் மு.மலரவன் தெரிவித்துள்ளார்.

யாழில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாணத்தைப் பொறுத்தவரையில் அண்மையில் நாங்கள் இலங்கை வரலாற்றில் இரண்டாவது தடவையாக கண்ணியல் பிரிவு யாழ் போதனா வைத்தியசாலையில் கூடுதலான வெண்புரை சத்திர சிகிச்சைகளை குறுகிய காலத்துக்குள் செய்திருக்கின்றோம்.

நாங்கள் தான் இலங்கை வரலாற்றில் முதல் முறையாக தேசிய வெசாக்கை முன்னிட்டு கொவிட் காலத்திலும் 1200 கண்புரை சிகிச்சையை 10 நாட்களில் செய்துள்ளோம் என்றார். (ம-7)

# கிரிக்கெட்டை நாசமாக்கும் கூட்டத்தை விரட்டியடிக்க ஒன்றிணைவோம்

## எதிர்கட்சித் தலைவர் சஜித் அழைப்பு



(கொழும்பு)

கிரிக்கெட்டை நாசமாக்கும் கூட்டத்தை விரட்டியடிக்க கட்சி வேறுபாடின்றி ஒன்றிணைவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அழைப்பு விடுத்துள்ளார்.

ஊழல் நிறைந்த கிரிக்கெட் நிர்வாகத்திற்கு எதிராக நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிரிக்கெட் விளையாட்டிற்காக இனம்,மதம், சாதி, வர்க்கம்,கட்சி வேறுபாடின்றி அனைவரும் ஒன்றாய் கைகோர்கின்றனர் என்பதனால், இங்குள்ளவர்களும் ஒன்றாய் ஒரு தீர்மானத்திற்கு வந்து, நீதிமன்ற உத்தரவு என்ற போர்வையில் கிரிக்கெட் விளையாட்டை அழிப்பதற்கு எதிராக பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, இந்த ஊழல் பேர்வழி கும்பலை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நீதித்துறை மீது மிகுந்த நம்பிக்கை கொண்டவன் என்றாலும்,நேற்று ஒரு பெரிய துயரக சம்பவம் நடந்ததாகவும், இந்நாட்டில் கிராமிய பாடசாலை, மாவட்டம் மற்றும் மாகாண கிரிக்கெட் அணிகளுக்கு கிடைக்க வேண்டிய பணமும் ஒதுக்கீடுகளும் கிரிக்கெட் நிறுவனத்தை ஆளும் கும்பல், சூதாட்டக்காரர்கள் மற்றும் போதைப் பொருள் வியாபாரிகளால் விழுங்கப்படுகின்றன என்றும், நாடு குறித்து ஐ.சி.சிக்கு தவறான பிம்பத்தை காட்ட முயற்சிக்கின்றனர் என்றும், கிரிக்கெட் ஏகபோகத்தை உருவாக்க சூதாட்டக் கும்பல்,பாதாள உலகக் கும்பல்,கப்பம் கோரும் கும்பல்களுக்கு இடமளிக்கக் கூடாது என்றும், ஜனாதிபதியின் ஆதரவுடன் இந்த பிரேரணை நிறைவேற்றப்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். (ம-7)

## நாட்டின்...

சர் ரொஷான் ரணசிங்க, கிரிக்கெட் நிறுவனத்தில் இருக்கும் ஊழல், மோசடிகாரர்களை ஜனாதிபதியிடம் நெருங்குவதற்கு இடமளிக்கக்கூடாது.

ஜனாதிபதி காரியாலயத்துக்குள்ளும் பல சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்று தெரிவித்த அமைச்சர், அது தொடர்பில் விசாரணைகளை நடத்துமாறும் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டார்.

நாட்டின் அமைச்சரை அச்சுறுத்தும் வகையில், திருடர் கும்பல் சக்தி வாய்ந்தது. ஐ.பி.எல் போட்டியை ஜனாதிபதி கண்டு களித்துக்கொண்டிருந்த போது, அவருக்கு பின்னால் கிரிக்கெட் நிறுவனத்தின் ஷம்மித் சில்வாவின் பாதுகாவலர்கள் நின்றிருந்தனர். அவர்கள் பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் என்றும் அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார். (ம-7)


31ஆம் நாள் நினைவு அஞ்சலி

பிறப்பு 1972 . 09 . 12



இறப்பு 2023 . 10 . 10

அமரர் அன்ரனி சூசைதாசன்

(பிலிப் ராஜசிங்கம்)

எமது சகோதரன் பிலிப் ராஜசிங்கம் மந்திகை ஆதார வைத்தியசாலையில் மாதாந்த சிகிச்சைகளின் போது அவரை அன்போடும் பரிவோடும் ஏற்று பணி புரிந்த வைத்தியர்கள்,தாதியர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் எமது சகோதரன் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். (17804)

கோரியடி, பருத்தித்துறை.

இங்ஙனம் குடும்பத்தினர்



மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை WESTERN UNION MONEY TRANSFER, Ria, MoneyGram. money transfer ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7558)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்

303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.

021 222 5392, 076 315 6470


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இராஜதந்திரிகளாக இராணுவ அதிகாரிகள்

# பொறுப்புக்கூறலை மீண்டும் தட்டிக்கழித்தது இலங்கை அரசாங்கம்

## பேர்ள் அமைப்பு சுட்டிக்காட்டு

**(கொழும்பு)**

**யுத்த குற்றம் சாட்டப்பட்ட மூவரை சர்வதேச இராஜதந்திரிகளாக நியமித்துள்ளதன் மூலம் இலங்கை அரசாங்கம் யுத்த குற்றங்களிற்காக எவரையும் பொறுப்புக்கூறச் செய்யப்போவதில்லை என்ற வலுவான அரசியல் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளது என இலங்கையில் சமத்துவம் மற்றும் நிவாரணத்திற்கான மக்கள் அமைப்பு பேர்ள் தெரிவித்து ள்ளது.**

மூன்று யுத்த குற்றவாளிகளான ரவீந்திரசந்திரசிறி விஜயகுணரட்ண,தமித் நிசாந்த, சிறிசோம உலுகெட்டென சுதர்சன்பத்திரன ஆகியோரை சர்வதேச இராஜதந்திரிகளாக நியமித்துள்ளதன் மூலம் இலங்கை தனது தண்டனையிலிருந்து விலக்களிக்கப்பட்ட கலாசாரத்தை தொடர்ந்து பறைசாற்றி வருகின்றது என பேர்ள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையின் வடகிழக்கில் தமிழ் மக்களிற்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களிற்காக இலங்கை இராணுவத்தை சேர்ந்தவரையோ அல்லது அரசியலை சேர்ந்தவரையோ பொறுப்பேற்கச் செய்யப்போவதில்லை என்பது குறித்த இலங்கை அரசாங்கத்தின் வலுவான அரசியல் அர்ப்பணிப்பை துணிச்சலாக வெளிப்படுத்தும் விதத்தில் இந்த நியமனங்கள் அமைந்துள்ளன எனவும் பேர்ள் அமைப்பு தெரிவித்துள்ளது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 15 வருடத்தினை நினைவுகூறுவதற்கு முன்னர் நாங்கள் இந்த மாதம் மாவீரர் தினத்தை நினைவேந்துவதற்கு தயாராகிவரும் இவ்வேளையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்திடம் உறுதிப்பாடு இல்லை என்பது தெளிவாகின்றது எனவும் தெரிவித்துள்ள பேர்ள் அமைப்பு இலங்கையில் தற்போது காணப்படும் தோல்வியடைந்த சிங்கள பௌத்த ஒற்றையாட்சி அரச கட்டமைப்பினால் வடகிழக்கு தமிழர்களிற்கு நீதியையும் அரசியல் தீர்வினையும் வழங்க முடியவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளது.

உலுகெத்தனவும் பத்திரனவும் ஆயுத மோதலின் இறுதிக் கட்டங்களில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டதுடன் தொடர்புடையவர்கள். விஜயகுணரட்ண 11 பேர் கொழும்பில் இலங்கை கடற்படையால் கடத்தப்பட்ட விவகாரத்தில் முக்கியசந்தேகநபர் என குற்றம்சாட்டப்பட்ட சந்தன ஹெட்டியாராச்சிக்கு உதவியதற்காக கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டவர் என பேர்ள் அமைப்பு தெரிவித்துள்ளது. (நி-5-6)

# காணிகளை வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யாதிருக்க அரசு தீர்மானம்



(கொழும்பு)

வெளிநாட்டவர்களுக்கு இனி காணிகள் விற்கப்படமாட்டாது என அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஷங்ரிலா ஹோட்டலை நிர்மாணிப்பதற்கு காலி முகத்திடல் நிலத்தை விற்பனை செய்ததன் பின்னர் எந்தவொரு நிலத்தையும் வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யாமல் இருப்பதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இருந்தபோதிலும், அரசாங்க வேலைத்திட்டங்களுக்காக நிலங்களை குத்தகை அடிப்படையில் வழங்க முடியும்.

அத்துடன், முதலீடுகளைப் பெறுவது மிகவும் முக்கியம் என சுட்டிக்காட்டிய அமைச்சர், நாட்டில் காணிகளை வைத்துக் கொண்டு அதனூடாக வருமானத்தை ஈட்டாவிட்டால், நாட்டின் பொருளாதாரப் பொறிமுறையை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்றும் கேள்வியெழுப்பினார். (நி-5-6)

# ஓர் இனம் அழிவதை பாற்சோறு கொடுத்து கொண்டாடும் மனநிலை தமிழர்களுக்குஇல்லை

## சாணக்கியன் எம்.பி

(கொழும்பு)

காசா போலவே வடக்கும் கிழக்கும் சுடுகாடாக மாற பேரினவாதம் விரும்புகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

பாலஸ்தீனுக்கு ஆதரவாக கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்

காசா சுடுகாடாக மாறுகிறது. வடக்கையும் கிழக்கையும் சுடுகாடாக வைத்துக் கொள்ளவே பேரினவாதம் விரும்புகின்றது.

சுடுகாடாக ஆக்கப்படும் நேரத்தில் மௌனம் காத்தவர்கள் பலர். எம்மால் தமிழராக மக்கள் மற்றும் குழந்தைகள் கொல்லப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஏன் எனில் அதன் வலியும் வேதனையும் எமக்குத் தெரியும்.

2009 ஆம் ஆண்டுக்கும் அதற்கு முந்திய காலத்திலும் எம் குழந்தைகள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர்.

வைத்தியசாலைகள், மத வழிபாட்டிடங்கள், சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் முகாம்கள் என குண்டு மழை பொழிந்து அப்பாவி மக்கள் மற்றும் குழந்தைகள் கொல்லப்பட்டார்கள்.

ஓர் இனம் அழிவதை பாற்சோறு கொடுத்து கொண்டாடும் மனோநிலையில் எம் தமிழர்கள் என்றும் இருக்க மாட்டார்கள். எங்கு அநியாயம் நடக்கின்றதோ அங்கு எமது மக்களின் மற்றும் எனது குரல் ஒலிக்கும்.

கொல்லப்படுபவர்களுக்கு நீதி வேண்டும் என வலியுறுத்தும் இலங்கை வாழ் மக்கள் எமது நாட்டில் கொல்லப்படவர்களுக்கு நீதி கிடைக்கவும் போராட வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5-6)

## மசகு எண்ணெய் விலையில் வீழ்ச்சி

(கொழும்பு)

ஹமாஸ் தரப்பினருக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான மோதலை அடுத்து சர்வதேச சந்தையில் அதிகரித்திருந்த மசகு எண்ணெயின் விலை சற்று வீழ்ச்சியை பதிவு செய்து வருகின்றது.

இதன்படி, மசகு எண்ணெயின் விலை நேற்று வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 77.08 அமெரிக்க டொலராக நிலவுகிறது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 81.61 அமெரிக்க டொலராக வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

இதேவேளை, உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 3.17 அமெரிக்க டொலராக நிலவுகிறது. (நி-5-6)

# குவைத்தில் இருந்து நாடு கடத்தப்பட்ட இலங்கையர்கள்

(கொழும்பு)

வீசா இன்றி குவைத்தில் சட்டவிரோதமாக தங்கியிருந்து நாட்டின் பல்வேறு இடங்களில் பணிபுரிந்து வந்த இலங்கை வீட்டுப் பணியாளர்கள் 26 பேர் மீண்டும் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

குறித்த பணிப்பாளர்கள் இலங்கை தூதரகத்தின் தலையீட்டின் பேரில் குவைத்தில் இருந்து நாடு கடத்தப்பட்டு நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பதிவு செய்துள்ள 2000இற்கும் மேற்பட்ட வீட்டுப் பணியாளர்களில் இந்தக் குழு இலங்கைக்கு வருவதோடு, எஞ்சிய குழுவினரும் பகுதிகளாக இலங்கைக்கு அனுப்பப்பட்டு வருவதாகத் தூதரகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், விமானப் பயணச்சீட்டு இல்லாத இந்த இலங்கை வீட்டுப் பணியாளர்களுக்கு இலங்கைக்கு வருவதற்கு விமான டிக்கெட்டுகளை வழங்க குவைத்தில் உள்ள இலங்கை தூதரகம் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பென் ஸ்டோக்ஸ் சதம் நெதர்லாந்தை வீழ்த்தி இங்கிலாந்து ஆறுதல் வெற்றி





உலக கிண்ண கிரிக்கெட்டில் நெதர்லாந்தை வீழ்த்தி இங்கிலாந்து ஆறுதல் வெற்றி பெற்றது.

உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் 40வது லீக் ஆட்டம் புனேவில் நேற்று நடைபெற்றது.

இதில் இங்கிலாந்து, நெதர்லாந்து அணிகள் மோதின. டாஸ் வென்ற இங்கிலாந்து பட்டிங் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் ஆடிய இங்கிலாந்து அணி 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 339 ரன்களை குவித்தது. பென் ஸ்டோக்ஸ் சதமடித்து அசத்தினார். அவர் 84 பந்துகளில் 108 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். டேவிட் மலான் பொறுப்புடன் ஆடி அரை சதமடித்து 87 ரன்னில் வெளியேறினார். கிறிஸ் வோக்ஸ் அரை சதம் கடந்தார்.

இதையடுத்து, 340 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் நெதர்லாந்து அணி களமிறங்கியது. இங்கிலாந்து அணியினர் துல்லியமாக பந்து வீசியதால் சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் வீழ்ந்தன.

ஸ்காட் எட்வர்ட்ஸ் 38 ரன்னும், வெஸ்லி பரேசி 37 ரன்னும், சைப்ரண்ட் 33 ரன்னும் எடுத்தனர். தேஜா 41 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இறுதியில், நெதர்லாந்து 179 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதன்மூலம் 160 ரன்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து ஆறுதல் வெற்றி பெற்றது.


இங்கிலாந்து சார்பில் அடில் ரஷித், மொயின் அலி தலா 3 விக்கெட்டும், டேவிட் வில்லே 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

ஆட்ட நாயகனாக சதம் அடித்த பென் ஸ்டோக்ஸ் தெரிவானார். (ம-7)

## ஒரு நாள் தரவரிசை சுப்மன் கில் முதலிடம்

ஒருநாள் போட்டிக்கான பட்ஸ்மன்களில் புதிய தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் நேற்று வெளியிட்டது. இந்தப் பட்டியலில் இந்தியாவின் இளம் வீரர் சுப்மன் கில் முதல் இடம் பிடித்து அசத்தியுள்ளார்.

பாகிஸ்தான் கேப்டன் பாபர் அசாம் 2வது இடத்திலும், தென் ஆப்பிரிக்காவின் டி காக் மூன்றாம் இடத்திலும் உள்ளனர்.



இந்திய அணியின் முன்னாள் கப்டன் விராட் கோலி 4வது இடத்திலும், கேப்டன் ரோகித் சர்மா 6 வது இடத்திலும் உள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் டேவிட் வொர்னர் 5வது இடத்தில் உள்ளார்.

தென் ஆபிரிக்காவின் வான் டெர் டுசன் 7வது இடத்திலும், அயர்லாந்தின் ஹாரி டெக்டர் 8வது இடத்திலும், தென் ஆபிரிக்காவின் ஹென்ரிச் கிளாசன் 9வது இடத்திலும், இங்கிலாந்தின் டேவிட் மலான் 10வது இடத்திலும் உள்ளனர். (ம-7)






## பந்து வீச்சாளர் தரவரிசை முகமது சிராஜ் முதலிடம்

ஒருநாள் போட்டிக்கான பட்ஸ்மேன்கள் மற்றும் பந்துவீச்சாளர்களின் புதிய தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் நேற்று வெளியிட்டது.

பந்துவீச்சாளர்கள் பட்டியலில் இந்தியாவின் முகமது சிராஜ் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

தென் ஆபிரிக்காவின் கேசவ் மகாராஜ் 2வது இடத்திலும், அவுஸ்திரேலியாவின் ஆடம் ஜாம்பா 3வது இடத்திலும் உள்ளனர்.

இந்தியாவின் குல்தீப் யாதவ் 4வது இடத்திலும், பாகிஸ்தானின் ஷாகின் அப்ரிடி 5வது இடத்தில் உள்ளனர்.

இந்திய வீரர்கள் ஜஸ்பிரித் பும்ரா 8வது இடத்திலும், முகமது ஷமி 10வது இடத்துக்கும் முன்னேறியுள்ளனர். (ம-7)




### உலகக் கிண்ண கிரிக்கெட் - 2023 புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | இந்தியா | 8 | 8 | 0 | 16 |
| 2 | தென்னாபிரிக்கா | 8 | 6 | 2 | 12 |
| 3 | அவுஸ்திரேலியா | 8 | 6 | 2 | 12 |
| 4 | நியூசிலாந்து | 8 | 4 | 4 | 8 |
| 5 | பாகிஸ்தான் | 8 | 4 | 4 | 8 |
| 6 | ஆப்கானிஸ்தான் | 8 | 4 | 4 | 8 |
| 7 | இங்கிலாந்து | 8 | 2 | 6 | 4 |
| 8 | பங்களாதேஷ் | 8 | 2 | 6 | 4 |
| 9 | இலங்கை | 8 | 2 | 6 | 4 |
| 10 | நெதர்லாந்து | 8 | 2 | 6 | 4 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரிக்கெட் விவகாரம்
# அரசியல் ஆதாயம் அடைய எதிர்க்கட்சிகள் முயற்சி
### அமைச்சர் பிரசன்ன சாடல்



(கொழும்பு)

ஒரு வருடத்திற்கு முன்னர் நாட்டு மக்கள் கஷ்டப்பட்ட போது உணர்வற்ற எதிர்க்கட்சியினர் கிரிக்கெட் விவகாரத்தில் அக்கறை காட்டுவது மகிழ்ச்சி யளிக்கிறது என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை கிரிக்கெட் தொடர்பான பிரச்சினையில் தற்போது எதிர்க்கட்சிகள் அரசியல் இலாபம் அடைய முயற்சிப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிரிக்கெட் சபை திருடர்களின் கூடாரம் என நான் இந்த சபையில் நேற்று தெரிவித்தேன். அதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் எடுத்துள்ளார். நீதிமன்ற தீர்ப்பு குறித்து நான் பேசப்போவதில்லை. அந்த முடிவுகளை விமர்சிக்க எனக்கு உரிமை இல்லை.

எதிர்க்கட்சித் தலைவர் கிரிக்கெட்டை பயன்படுத்தி அரசியல் ஆதாயம் பெற முயற்சிக்கிறார். கடந்த வருடம் நாட்டில் அதிகமான பிரச்சினைகள் ஏற்பட்டன. நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

அப்போது ஒன்று சேராதவர்கள், அப்போது செய்தது போல் இப்பிரச்சினையிலும் அரசியல் ஆதாயம் அடைய முயற்சிக்கின்றனர்.

நாட்டு மக்கள் கஷ்டப்படும் போது உணர்வற்ற எதிர்க்கட்சிகள் கிரிக்கெட் விவகாரத்தில் உணர்ச்சி வசப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. விளையாட்டு அமைச்சரின் கருத்துடன் நாங்கள் உடன்படுகிறோம். ஆனால், பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்ள பணிகளையும் நாம் செய்ய வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவருக்கு பிரேரணை ஒன்றைக் கொண்டுவர வேண்டுமாயின் அதனைக் கொண்டு வாருங்கள். நாங்கள் அதற்கு எதிரானவர்கள் அல்ல. உதவி செய்வோம் எனவும் தெரிவித்தார். (நி-5-6)

## ஒரு தலைப்பட்சமாக செயற்படும் நீதிமன்றம்-விளையாட்டுத்துறை அமைச்சர்



(கொழும்பு)

கிரிக்கெட் இடைக்கால சபையை இடைநிறுத்தி மேன் முறையீட்டு நீதிமன்றம் மேற் கொண்ட அறிவிப்பு பக்கச்சார்பானது என்று விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

விசேட அறிவிப்பொன்றை மேற்கொண்ட அவர் நீதி மன்றம் ஒரு தலைப்பட்சமாக செயற்படுவதாக கடுந்தொனியில் தெரிவித்தார்.

நீதிமன்றத்தை அவமதிக்கும் நோக்கம் தமக்கு இல்லையென்றும் மக்கள் உண்மைகளை தெரிந்து கொள்ள வேண்டும் என்பதால் அதனை பகிரங்கமாக தெரிவிக்க வேண்டிய நிலை உள்ள தென்றும் அமைச்சர் சுட்டிக் காட்டினார். (நி-5-6)

## சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த மாதத்தின் முதல் 5 நாட்களில் 22 ஆயிரத்து 202 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள வாராந்த அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்த வருடத்தில் இதுவரையில் இலங்கைக்கு 11 இலட்சத்து 47 ஆயிரத்து 657 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இந்த மாதத்தின் முதல் 5 நாட்களில் ரஷ்யாவிலிருந்து அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து இந்தியாவில் இருந்து மூவாயிரத்து 866 பேரும் ஜேர்மனியிலிருந்தும் இரண்டாயிரத்து 11 பேரும், பிரித்தானியாவிலிருந்து ஆயிரத்து 539 பேரும் வந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (நி-5-6)

## தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல்; நிறைவேற்று அதிகாரி பதவி நீக்கம்

(கொழும்பு)

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி, வைத்தியர் விஜித் குணசேகர பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக அவர் பதவி நீக்கப்பட்டதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக்க ஸ்ரீசந்திர குப்த தெரிவித்துள்ளார்.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தலைவர் மற்றும் பிரதம அதிகாரி உள்ளிட்ட தரப்பினர், தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்ததாக அண்மைக் காலமாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

இதன்படி, அண்மையில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தலைவர் நீக்கப்பட்டு, புதிய தலைவராக வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம நியமிக்கப்பட்டார்.

அதன் பின்னரும் பிரதம நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றிய விஜித் குணசேகர, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் முக்கியமான தகவல்கள் அடங்கிய பல ஆவணங்களை அழித்துள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்கள் குற்றம் சுமத்தின. இது தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)


# இராசிபலன்

09.11.2023
ஐப்பசி 23, வியாழக்கிழமை
ஏகாதசி முற்பகல் 11.12 மணிவரை


உத்தரம் முன்னிரவு 10.52 மணிவரை
சுபநேரம் -7.35-9.05 மணிவரை
இராகுகாலம்-1.35-3.05 மணிவரை

சந்திராஷ்டமம்-
அவிட்டம்,சதயம்.
ஏகாதசி விரதம்.


வள்ளவன்





தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், இலாப நோக்கோடு பழகியவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.





குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்,பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.





பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள்,நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், சயனசுகக் குறைவான நாள்.





குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், வரவேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும் சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும்.





வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், மன மகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள்.




வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.




சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், குடும்பப் பொறுப்புக்கள் கூடும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.




யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், போசன சுகமுண்டு.




விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், புதிய அனுபவங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பெரிய மனிதர்களின் [illegible]




குடும்ப ஒற்றுமை கூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு.




உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வருமானம் திருப்தி தரும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நேரம் காலம் அறிந்து ஒருவரிடம் கருத்தினைக் கேட்க வேண்டும்.

# மயிலத்தமடு மேய்ச்சல்தரை போராட்டத்திற்கு யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஆதரவு

மயிலத்தமடு, மாதவனைப் பிரதேசத்திலே ஜனநாயகப் போராட்டத்திலே ஈடுபட்ட மாணவர்களின் கைதினைக் கண்டிக்கும் அதேவேளை, தமது உரிமைகளுக்காகப் போராடும் கால்நடை வளர்ப்பாளர்களின் போராட்டத்துக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தனது முழுமையான ஆதரவினை தெரிவிப்பதாக அறிக்கை வெளியிட்டுள்ளது.

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல்தரைகள் காலங்காலமாக அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களினால் தமது கால்நடைகளை வளர்ப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. அண்மைய வருடங்களில், இந்தப் பிரதேசங்களில் இலங்கை அரசினால் சட்டவிரோதமான முறையில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். இந்தக் குடியேற்றங்களின் காரணமாக மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைப் பிரதேசங்களினைத் தமிழ் கால்நடை வளர்ப்பாளர்கள் பயன்படுத்துவது தடைப்பட்டிருக்கிறது. மேய்ச்சல்தரையினைப் பயன்படுத்தும் தமிழ் மக்கள் மீது வன்முறைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அத்துடன் மேய்ச்சலுக்கு விடப்பட்ட அவர்களின் கால்நடைகளின் மீதும் வன்முறை பிரயோகிக்கப்படுகின்றது. கால்நடை வளர்ப்பாளர்களுக்கு மேய்ச்சல்தரை மீது இதுவரை இருந்த உரித்து அகற்றப்பட்டமை அவர்களின் பொருளாதாரத்தின் மீதும் வாழ்வாதாரத்தின் மீதும் கடுமையான பாதிப்பினை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்த அத்துமீறல் செயன்முறையினையும் வன்முறையினையும் கண்டிக்கும் வகையில் யாழ்.பல்கலைக் கழகத்தினையும் கிழக்குப் பல்கலைக் கழகத்தினையும் சேர்ந்த தமிழ் மாணவர்கள் ஓர் அமைதிப் போராட்டத்திலே கடந்த நவம்பர் மாதம் 5 ஆம் திகதி அன்று இந்தப் பிரதேசத்திலே ஈடுபட்டனர். சட்டவிரோதமாக ஒன்று கூடினர் என்ற தோரணையிலே, இந்தப் போராட்டத்திலே ஈடுபட்ட மாணவர்களிலே பலர் சந்திவெளிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அமைதி வழியில், கால்நடை வளர்க்கும் மக்களின் மேய்ச்சல் தரை மீதான உரித்துக்காகவும் ஜனநாயகத்திற்காகவும் போராடிய பல்கலைக்கழக மாணவர்களினைப் பொலிஸார் கைது செய்தமையினை யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மாணவர்களின் ஜனநாயக உரிமையின் மீது மேற்கொள்ளப்பட்ட மீறலாகவே இந்தக் கைதுகளை நாம் பார்க்கிறோம். வடக்குக் கிழக்கிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடும் மக்களையும் மாணவர்களையும் கைது செய்யும் போக்கு தொடர்வதனை நாம் இங்கு சுட்டிக்காட்டுகின்றோம். மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் நிலங்களின் மீதான ஆக்கிரமிப்பினை நாட்டின் வடக்குக் கிழக்கிலே பல தசாப்தங்களாக இலங்கை அரசினால் மேற்கொள்ளப்படும் சிங்கள பௌத்த மயமாக்கலின் ஒரு வடிவமாகவே யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கருதுகிறது. வடக்குக் கிழக்குப் பகுதிகளிலே வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் அரசியல் மற்றும் பொருளாதார இருப்புக்கு இந்த ஆதிக்கம் மிக்க சிங்கள பௌத்தமயமாக்கல் செயன்முறை ஓர் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

இராணுவத்தின் உதவியுடனும் தீவிரத்தன்மை மிக்க பௌத்த மதகுருக்களின் ஆதரவுடனும் இனவாதத்தினைக் கையில் எடுத்துள்ள சிங்கள அரசியல்வாதிகளின் அனுசரணையுடனும் இந்தச் செயன்முறை வடக்குக் கிழக்கிலே தொடர்ந்த வண்ணம் உள்ளது. இதன் காரணமாக இனங்களுக்கு இடையிலே பதற்றமும் வெறுப்புமே உருவாகி வருகிறது.

அண்மையில் இந்தப் பகுதியில் ஒரு புத்தர்சிலையும் நாட்டப்பட்டது. இந்த உரிமை மீறல் தொடர்பிலே பாதிக்கப்பட்ட மக்களும் அவர்களது ஆதரவாளர்களும் பல மாதங்களாக அமைதி வழியிலே போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் பிரதேசத்தில் சட்டவிரோதமாகக் குடியேற்றப்பட்டவர்கள் அகற்றப்பட்டு கால்நடை வளர்ப்பாளர்களுக்கு இந்த மேய்ச்சல்தரை மீது இருக்கும் உரித்து உறுதி செய்யப்பட வேண்டும் எனவும் அரசினை எமது ஆசிரியர் சங்கம் கோருகிறது. மயிலத்தமடு, மாதவனை உள்ளடங்கலாக வடக்குக் கிழக்கிலே இடம்பெறும் அனைத்து சிங்கள பௌத்த மயமாக்கல செயன்முறைகளும் உடனடியாக நிறுத்தப்பட்டு அவற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதிகிடைக்க வேண்டும் எனவும் நாம் கோருகிறோம்.

இந்த ஜனநாயக மீறல்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கும்படி நாம் நாட்டின் அனைத்து முற்போக்கு சக்திகளையும் இன, மத, பிராந்திய பேதமின்றி ஒன்றுபடும் படி கோருகிறோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5-6)

## உரும்பிராயில் விபத்துக்குள்ளான டிப்பர் - ஹண்டர் ரக வாகனம்

### சாரதிகள் காயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.உரும்பிராய் சந்திக்கு அருகாமையில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,


யாழ்ப்பாணம் உரும்பிராய் சந்தியில் இருந்து மருதனார் மடம் செல்லும் வீதியில் உரும்பிராய் சந்திரோதயா (ஞான பண்டிதர்) பாடசாலைக்கு அருகாமையில் டிப்பர் மற்றும் ஹண்டர் ரக வாகனம் நேருக்கு நேர் மோதி விபத்திற்குள்ளானதில் இரு வாகனங்களின் சாரதிகளும்படுகாயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் படுகாயமடைந்த சாரதிகள் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அதேவேளை விபத்துடன் தொடர்புடைய இரு வாகனங்களும் பலத்த சேதமடைந்த நிலையில் காணப்படுவதுடன் குறித்த விபத்து காரணமாக அப் பகுதியுடனான போக்குவரத்தும் சிறிது நேரம் தடைப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(நி-5-6-33)





வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பின் ஏற்பாட்டில் தமிழ் மக்களுக்கான கௌரவமான அரசியல் தீர்வுச் செயற்பாடான 100ஆவது நாள் செயற்பாட்டின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு நிகழ்வுகள் நேற்று நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

(படங்கள்- சுபேசன், கஜிந்தன்)

## வலய மாணவர் பாராளுமன்ற அமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம் நடத்தும் வலய மாணவர் பாராளுமன்ற அமர்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யா/சென் பற்றிக்ஸ் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் யாழ்.கல்வி வலய வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.யோன்குயின் ரஸ் கலந்து கொள்ளவுள்ளார். (நி-5-6)

## இரண்டு வீடுகளில் கொள்ளையில் ஈடுபட்ட சம்பவத்தில் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இரு வீடுகளில் கொள்ளையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவரும் அவருக்கு உடந்தையாக செயற்பட்ட பெண் மற்றும் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளை வாங்கிய நபர் ஆகிய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஒரு தொகுதி நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் மற்றொரு தொகுதி நகை மன்னார் மற்றும் திருகோணமலை பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றை மீட்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இரு கொள்ளை சம்பவம் தொடர்பில் உரிமையாளர்களால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் நேற்று முன்தினம் குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள மூவரையும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6-33)



வேவில் விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தின் வாணி விழா அண்மையில் இடம்பெற்றது.

யாழ்.அச்சுவேலி மத்திய கல்லூரியில் மாணவர் பாராளுமன்ற அமர்வும் அமைச்சர்களின் காரசாரமான விவாதங்களும் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் இணைய மோசடிகள்

# பின்னணியில் வெளிநாட்டவர்கள்

## அவதானமாக இருக்குமாறு பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

**சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்துள்ள வெளிநாட்டவர்களால் இணையத்தின் ஊடாக இலங்கையில் மேற்கொள்ளப்படும் மோசடிகள் தொடர்பில் பொது மக்களை அவதானமாக இருக்குமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

இலங்கையில் அதிகரித்து வரும் இணையக்குற்றங்கள் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே இந்த விடயத்தினை குறிப்பிட்டுள்ளனர்.

தற்போது நிகழ்கின்ற இணையக்குற்றங்களில் வெளிநாட்டவர்களது ஈடுபாடு அதிகரித்து வருகிறது.

அதன்படி, ஒன்லைன் மூலமான நிதி மோசடி, தனிநபர்களின் தரவுகளைத் திருடுதல் மற்றும் இணைய வர்த்தக மோசடிகள் போன்ற குற்றங்களில் இலங்கையில் சுமார் 40 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பல தூதரகங்களில் இருந்து பெறப்பட்ட புகார்களின் அடிப்படையிலேயே இந்த கைதுகள் இடம்பெற்றன.

மேலும், சில வெளிநாட்டு பிரஜைகள் பல்வேறு நாடுகளில் உள்ளவர்களின் கணக்குகளில் இருந்து பல் மில்லியன் ரூபாவை இணையத்தின் ஊடாக மோசடி செய்துள்ளதாகவும் குற்றச்சாட்டுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

எனவே இவ்வாறான குற்றங்களைத் தடுத்து, இந்நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்காக அரசாங்கத்தினால் சட்டம் ஒன்று இயற்றப்பட வேண்டும் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-5-6)

# கைப்பற்றப்படும் போதைப்பொருட்கள் எங்கே? அவற்றை ஏன் எரிப்பதில்லை?

## சபையில் மைத்திரி கேள்வி



(கொழும்பு)

கடந்த நான்கு வருடங்களில் பிடிக்கப்பட்ட போதைப் பொருட்களுக்கு என்ன நடந்தது என வினவிய முன்னாள் ஜனாதிபதி, ஏன் எரிக்கப்படவில்லை எனவும் கேள்வி எழுப்பினார்.

போதைப்பொருட்கள் கைப்பற்றப்படுகிறது. ஆனால் அந்த போதைப்பொருட்கள் எங்கே என்று தெரியவில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

வனாத்தவில்லுவில் போதைப்பொருள் எரியூட்டும் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார். (நி-5-6)

# வாக்கெடுப்பின்றி நிறைவேறியது ஊழல் தடுப்பு திருத்த சட்டமூலம்

(கொழும்பு)

ஊழல் தடுப்பு திருத்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் வாக்கெடுப்பு இல்லாமல் ஊழல் தடுப்பு திருத்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (நி-5-6)

# கிராம அலுவலருக்கான போட்டிப் பரீட்சை டிசெம்பர் முதல் வாரத்தில்

(கொழும்பு)

2,763 கிராம அலுவலர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான பரீட்சை எதிர்வரும் டிசெம்பர் முதல் வாரத்தில் நடைபெறும் என பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.(நி-5-6)

# வைத்தியர்கள் இன்மையால் 12 மருத்துவமனைகள் பூட்டு

(மட்டக்களப்பு)

வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறி வருவதால் மட்டக்களப்பில் 12 வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின்கிழக்குமாகாண இணைப்பாளர் வைத்தியர் தியாகராஜா தவநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று வைத்தியர்களுக்கான பொருளாதார நியாயத்தை ஏற்படுத்துவோம், இலவச சுகாதார சேவையைப் பாதுகாப்போம் என்னும் தொனிப்பொருளில் வைத்தியர்களால் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே வைத்தியர் தியாகராஜா தவநேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறி வருவதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 60 வைத்தியசாலைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 12 வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன. எனவே வைத்தியர்களின் வெளியேற்றத்தை தடுக்க அவர்களுக்கான பொருளாதார ரீதியான உறுதிப்படுத்தலை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

இலவச சுகாதார சேவையினை பாதுகாப்பதற்காக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. நாட்டைவிட்டு வைத்தியர்கள் வெளியேறுதல், மருந்து கொள்வனவில் ஏற்பட்டிருக்கின்ற சிக்கல்கள் காரணமாக இலவச மருத்துவ சேவையானது முடக்க நிலையினை நோக்கி சென்றுகொண்டிருக்கின்றது. இதற்கு தீர்வாக ஆறு தீர்வினை ஆறு மாதங்களுக்கு முன்னர் அரசுக்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் வழங்கியிருந்தது. அதற்காக பல்வேறு அழுத்தங்களையும் அரசாங்கத்திற்கு வழங்கியிருந்தது. (நி-5-6)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

04.11.2023 அன்று அதிபர் நியமனத்தைப் பெற்றுக்கொண்ட எமது கல்லூரியின் ஆசிரியப் பெருந்தகைகளான




திருமதி. கீதாஞ்சலி சிவதாசன்
NDT(English), BA(English), B.Ed



திரு. தங்கராசா ஜெபசுதன்
B.Com, PGDE, M.Ed



திரு. சிவபாலன் சுதன்
B.Sc(Hons), PGDE, M.Sc, M.Ed



திரு. மதியாபரணம் மதிராஜ்
NDT(Maths), B.Ed



திரு. தம்பையா தர்மசீலன்
NDT(Hinduism), BA, PGDE, M.Ed

Congratulations

ஆகியோரை பணி சிறக்க மனமுவந்து வாழ்த்துவதோடு
மென்மேலும் பல பதவிகள் பெற்று பணியாற்ற
கல்லூரிச் சமூகம் சார்பாக வாழ்த்துகின்றோம்.

Best Wishes

(17807)

வாழ்த்துவோர்:- ஆசிரியர் நலன்புரிச்சங்கம், யா/வரணி மத்திய கல்லூரி, வரணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## காசாவில்
# ஐ.சி.ஆர்.சி வாகன தொடரணி மீது தாக்குதல்- சாரதி ஒருவர் காயம்

(காசா)

காசாவில் மனிதாபிமான உதவிப்பொருட்களை கொண்டு சென்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் (ICRC) வாகனத் தொடரணி மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலில் இரண்டு பாரவூர்திகள் சேதமடைந்துள்ளதுடன் சாரதி ஒருவர் காயமடைந்துள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் அறிவித்துள்ளது.

பாலஸ்தீனிய ரெட்கிரசண்ட் சொசைட்டியின் அல்-குட்ஸ் மருத்துவமனை உட்பட, "சுகாதார வசதிகளுக்கு உயிர்காக்கும் மருத்துவப் பொருட்களை" வழங்குவதற்காக ஐந்து பாரவூர்திகள் மற்றும் இரண்டு வாகனங்கள் கொண்ட ஒரு தொடரணி சென்று கொண்டிருந்த போது, தாக்குதலுக்கு இலக்காகியதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடரணி பின்னர் ஆறு அம்புலன்ஸ்களுடன் பலத்த காயமடைந்த நோயாளிகளை ரஃபா கடவைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர், எனினும் ICRC இன் தலைவர் போரின் போது உதவிகளை வழங்குவது எவ்வளவு கடினமாகிவிட்டது என்பதை வலியுறுத்தினார்.

"இந்த நிலைமைகளின் கீழ் மனிதாபிமான பணியாளர்கள் வேலை செய்ய முடியாது" என்று காசாவில் உள்ள ICRC துணைத் தூதுக்குழுவிற்கு தலைமை தாங்கும் வில்லியம் ஸ்கோம்பர்க் கூறினார். (நி-5-6)



# ஆப்கானில் குண்டுவெடிப்பு 7 பேர் உயிரிழப்பு



(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபுலில் நேற்று முன்தினம் மாலை குண்டு வெடிப்பு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

டேஷ் -இ பர்ஷி பகுதியில் 27 பயணிகளுடன் பேருந்து சென்று கொண்டிருந்த போது பேருந்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்து சிதறியுள்ளது.

குறித்த குண்டுவெடிப்பில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். 20 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-6)

# காசாவில் இருந்து வெளியேறிய சுமார் 200 ஜேர்மன் பிரஜைகள்

(பெர்லின்)

200இற்கும் மேற்பட்ட ஜேர்மன் பிரஜைகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் காசாவை விட்டு வெளியேறியுள்ளதாக ஜேர்மனியின் வெளிவிவகார அமைச்சர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இஸ்ரேலிய இராணுவத்தால் 10,000 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ள நிலையில் கடலோரப் பகுதியிலிருந்து வெளியேற உதவிய எகிப்துக்கு நன்றி தெரிவித்தார்.

இதேநேரம் காசாவில் மனிதாபிமான போர் நிறுத்தத்திற்கு ஜேர்மனியின் வெளிவிவகார அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார்.



காசாவில் உள்ள மக்களுக்கு தண்ணீர், உணவுகள், மருத்துவ உதவி தேவை என்றும் அதனை வழங்க போர் நிறுத்தம் அவசியம் என்றும் கூறியுள்ளார். (நி-5-6)

# போன...

# தீவிர...

## நெதன்ய...

(வோஷிங்டன்) – ...
அமெரிக்க ஜனா...
கொண்டு அவசர ...
முறையில் தற்கால...

இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பு இடையே போர் தொடங்கி ஒரு மாதமாகி விட்டது.

ஆ...
போர்...
வில்...
அப்ப...



# கனடாவில் பனி நீரில் மூழ்கி மூவர் பலி



(ஒட்டாவா)

கனடாவில் பனி நீரில் மூழ்கி மூன்று பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சஸ்கட்ச்வான் பகுதியில் அமைந்துள்ள ஆபோல்ட் ஏரியில் கடந்த சனிக்கிழமை இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.பனி கட்டிகளினால் மூடப்பட்டிருந்த குளம் ஒன்றில் ஐந்து பேர் மேல் பகுதியில் நின்றிருந்த வேளையில் சிறுவர்களில் இருவர் திடீரென பனி பாறை உடைந்து நீருக்கு அடியில் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

நீரில் மூழ்கிய சிறுவர்களை மீட்பதற்கு இரண்டு ஆண்கள் முயற்சித்த போது அவர்களும் நீரில் மூழ்கியுள்ளனர்.

இவ்வாறு பனி நீரில் மூழ்கிய ஐந்து பேரில் இரண்டு ஆண்களும் ஒரு சிறுமியும் உயிரிழந்துள்ளனர். (நி-5-6)

## காசா தொடர்பில்
# இந்தியாவின் நிலைப்பாட்டை வெளிப்படுத்திய பிரதமர்மோடி



(டில்லி)

இஸ்ரேல்-பாலஸ்தீன விவகாரத்தில் இந்தியாவின் நீண்டகால நிலையான நிலைப்பாட்டை பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரெய்சியை பிரதமர் மோடி நேற்று முன்தினம் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு பேசினார்.

இந்த உரையாடலின் போதே இஸ்ரேல்-ஹமாஸ் போர் குறித்தும், இந்திய -ஈரான் இடையேயான உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும் இரு நாட்டு தலைவர்களும் விவாதித்தனர் எனக் கூறப்படுகிறது.

மேலும் போர் தீவிரமடைவதை தடுப்பது, தொடர்ந்து மனிதாபிமான உதவிகளை உறுதி செய்து, கலவரத்தால் பாதிக்கப்பட்ட காசாவில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை விரைவாக மீட்டெடுப்பதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ரை நிறுத்துமாறு கோரி
# ...ரமடையும் போராட்டங்கள்

## ...ன்யாகு–பைடன் அவசர ஆலோசனை

(...டன்)

**...க ஜனாதிபதி ஜோபைடன் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் தொலைபேசியில் தொடர்பு ...அவசர ஆலோசனை நடத்தியதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. அப்போது மனிதாபிமான ...தற்காலிக போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்தியதாக கூறப்படுகிறது.**

ஆனாலும் இன்னும் போர் முடிவுக்கு வர வில்லை. இந்தப்போரில் அப்பாவி குழந்தைகள்,



பொது மக்கள் பலியாகி வருவதால் போரை உடனே நிறுத்த வேண்டும் என பல உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

போரை நிறுத்தக்கோரி அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி உள்ளிட்ட பல நாடுகளில் பொது மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடன் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவசர ஆலோசனை நடத்தியதாக அமெரிக்க வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

காசாவில் பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேறும் வரை காசாவில் தற்காலிக போர் நிறுத்தத்தை இஸ்ரேல் பின்பற்ற வேண்டும் என ஜோபைடன் இஸ்ரேல் பிரதமரிடம் வலியுறுத்தினார்.

மேலும் இரு தலைவர்களும் ஹமாஸ் அமைப்பினர் பிடியில் இருக்கும் பணயக் கைதிகளை பாதுகாப்பாக மீட்பது குறித்தும் விவாதித்தனர்.

பணயக் கைதிகளாக இருக்கும் அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாட்டவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகளை தீவிரப்படுத்துமாறும், காசாவிற்கு செல்லும் மனிதாபிமான உதவிகள் அதிகரிக்கப்பட்டதை வரவேற்பதாகவும் ஜோபைடன் தெரிவித்தார். (நி-5-6)



---

...டி

...ரின் ...ாஸ் ...ய - ...உற ...வது ...லை ...னர் ...விர ...தாட ...உத ...ப்து, ...பட்ட ...றும் ...ிரை ...அவ ...வலி ...5-6)

---

## இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா பயங்கர ஏவுகணை தாக்குதல்



(காசா)

லெபனானில் இருந்து வடக்கு இஸ்ரேலில் உள்ள கோலன் குன்றுகள்மற்றும் அப்பர் கலிலியை நோக்கி சுமார் 20 ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியதாக ஹிஸ்புல்லா அமைப்பு அறிவித்துள்ளது.

ஹிஸ்புல்லாவுடன் இணைந்த லெபனான் ஊடகங்கள், எல்லைக்கு அருகில் உள்ள கோலன் குன்றுகளில் பல இடங்களில் ஏவுகணைகள் விழுந்து வெடிக்கும் காட்சிகளை வெளியிட்டன.

லெபனானில் இருந்து வடக்கு இஸ்ரேல் மீது 20 ஏவுகணைகள் வீசப்பட்டதாக இஸ்ரேல் அறிவித்துள்ள நிலையில் புதிய அறிவிப்பை இஸ்ரேல் வெளியிட்டுள்ளது. (நி-5-6)

---

## சோமாலியாவில் வெள்ளப்பெருக்கு 40 பேர் பரிதாபமாக உயிரிழப்பு



(மொகடீஸ்)

கென்யா மற்றும் சோமாலியாவில் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி சுமார் 40 பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை பல்லாயிரக் கணக்கானோர் இடம் பெயர்ந்துள்ளதோடு பல வீடுகள், சாலைகள் மற்றும் பாலங்கள் சேதமடைந்துள்ளன. இதனையடுத்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் அவசர நிலை பிறப்பித்து அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

மேலும் தெற்கு சோமாலியாவின் ஜுபாலாண்ட் மாநிலத்தில் உள்ள லுக் மாவட்டத்தில் வெள்ளத்தில் சிக்கியுள்ள சுமார் 2,400 குடியிருப்பாளர்களை பாதுகாக்க அவசர மற்றும் மீட்புப் படையினர் முயற்சித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழமற்ற கடற்பகுதிகளில் விஷப்பாறை மீன்கள் பொதுமக்களுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் ஆழமற்ற கடற்பகுதிகளில் காணப்படும் விஷப்பாறை மீன்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.


ஒட்டுண்ணியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜானக ரூபன் தெரிவிக்கையில்,

இந்த விஷமீன் இனம் Gonmaha-Stone Fish' என்று அடையாளப்படுத்தப்படுவதாக தெரிவித்தார்.

இந்தப் பாறை மீன்கள் மணல் அல்லது இடிபாடுகள் நிறைந்த பாறை அடுக்குகள், ஆழமற்ற தடாகங்கள் மற்றும் குறைந்த அலைகள் உள்ள சிறிய குளங்களில் காணப்படும்.

இவை மெதுவாக இயங்கும் மீன்கள் என்பதால் பெரும்பாலும் மறைக்கப்பட்டு மற்றும் சில நேரங்களில் பாசிகளால் மூடப்பட்டிருக்கும்.

இந்த மீன்கள் இனப்பெருக்க நோக்கத்திற்காக கரைக்கு வருகின்றன. இவற்றின் முதுகில் அதிகளவான எலும்புகள் இருப்பதுடன் அவை மிகவும் விஷத்தன்மை பொருந்தியவை என அவர் தெரிவித்தார்.



எனவே கடலில் குளிக்கும் போது அவதானமாக இருக்குமாறும் கடற்கரைப் பகுதிக்கு செல்லும்போது செருப்பு அணிந்து செல்லுமாறும் பொதுமக்களை அவர் அறிவுறுத்தியுள்ளார். (நி-5-6)

# கொழும்பு துறைமுக அபிவிருத்திக்கு 500 மில்லியன் டொலர் நிதியுதவி



(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தில் ஆழ்கடல் கப்பல் போக்குவரத்து கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கு 500 மில்லியன் டொலர்களுக்கு அதிகமான நிதி வழங்கப்பட்டுள்ளதாக அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதி நிறுவனம் நேற்று அறிவித்துள்ளது.

இந்த முதலீடு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் இந்தியா உட்பட அதன் பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்புக்கான அமெரிக்காவின் நிலையான அர்ப்பணிப்பை மேலும் எடுத்துக்காட்டுகிறது. (நி-5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 400 | 320 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 450 | 450 |
| தக்காளி | 250 | 280 | 280 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 150 | 150 |
| கோவா | 360 | 300 | 300 | 300 |
| கரட் | 400 | 350 | 350 | 400 |
| பூசணி | 100 | 80 | 80 | 100 |
| புடோல் | 200 | 250 | 180 | 200 |
| வாழைக்காய் | 180 | 180 | 150 | 300 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 300 | 280 | 300 | 300 |
| பாகற்காய் | 350 | 450 | 400 | 400 |
| வெண்டக்காய் | 240 | 200 | 220 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 120 | 160 |
| பயிற்சிங்காய் | 400 | 400 | 280 | 350 |
| லீக்ஸ் | 250 | 240 | 200 | 300 |
| பீற்றூட் | 150 | 150 | 180 | 250 |
| கறிமிளகாய் | 500 | 350 | 500 | 500 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 500 |
| போஞ்சி | 400 | 600 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 330 | 300 | 320 | 350 |
| கீரை – 1 பிடி | 100 | 100 | 80 | 150 |
| தேசிக்காய் | 1400 | 1300 | 1400 | 1500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 80 | 70-90 |
| இராசவள்ளி | 450 | 500 | 500 | 550 |
| வெங்காயப்பூ | 450 | 400 | -- | 500 |
| முள்ளங்கி | 120 | 150 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 150 | 120 | 200 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2962

### பானுயன்




### விபுலாயினி




### சஜித்




### ரேனுயன்




### கவிதா




### வனிதா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனியவள மணல் அகழ்வுக்கான

# ஆவணம் கையளிக்கும் நடவடிக்கை

# மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டது

(மன்னார்)

**மன்னாரில் கனியவள மணல் அகழ்வுக்கான ஆவணம் கையளிக்கும் நிகழ்வு மக்கள் எதிர்ப்பை அடுத்து கைவிடப்பட்டது.**



மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கொண்ணையன் குடியிருப்பு பிரதேசத்தில் மக்களின் தனியார் காணிகளை அனுமதியின்றி அபகரித்து நடைமுறைப்படுத்தும் கனியவள மணல் அகழ்வுக்கான ஆவணம் சட்டபூர்வமாக கையளிக்கும் நடவடிக்கை நேற்று காலை குறித்த பிரதேசத்தில் இடம்பெற இருந்த நிலையில் அப்பகுதி மக்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பு தெரிவித்து வருகை தந்த திணைக்கள தலைவர்கள் அடங்கிய குழுவை திருப்பி அனுப்பியுள்ளனர்.

குறித்த பகுதிக்கு ஆவணக் கையளிக்கும் நிகழ்விற்காக 20 வரையிலான திணைக்கள அதிகாரிகள் பெருந்தொகையான வாகனங்களில் வருகை தருவதை அறிந்த அக்கிராம மக்கள் தங்கள் ஆலய மணிகளை ஒலிக்க வைத்து கிராம மக்களை ஒன்று திரட்டி அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு செல்ல முடியாதவாறு பாதைக்கு குறுக்கே மரங்களை போட்டு தடை செய்தனர்.

மாவட்ட பொதுஅமைப்புக்களின் ஒன்றிய பிரதிநிதிகள், மக்கள் ஒன்று திரண்டு சம்பவ இடத்திற்கு சென்று இந்த மணல் அகழ்வு மற்றும் காற்றாலைகளால் இப்பிரதேசம் எதிர்கொண்டு வரும் பாதிப்புகளை தெளிவாக வருகை தந்திருந்த அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தி குறிப்பிட்ட இடத்திற்கு அவர்களை செல்ல விடாது பாதையை மறித்து திருப்பி அனுப்பியுள்ளனர். (நி-5-6-285)





மாகாண ,தேசிய மட்டத்தில் பங்குபற்றிய வீர,வீராங்கனைகளிற்க்கான இரண்டாவது நர்த்தனா விருது வழங்கும் விழா கடந்த மாதம் 29 ஆம் திகதி மன்னார் ஆண்டாங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இவ்விழாவில் நவற்குடா நர்த்தன கலாலய மாணவிகளின் பரதநாட்டிய நிகழ்வும் அரங்கேற்றப்பட்டது.

## அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய

# நான்கு டிப்பர்கள் பறிமுதல்




(தருமபுரம்)

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற நான்கு டிப்பர்கள் பறிமுதல் செய்யப்பட்டு அதன் சாரதிகள் நால்வரையும் பொலிஸார் [illegible]ள்ளனர்.

கல்லாற்றுப் பகுதி மற்றும் புளியம்பொக்கனை பகுதிகளில் நேற்று தருமபுர பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போது குறித்த நடவடிக்கை இடம் பெற்றது.

பறிமுதல் செய்யப்பட்ட நான்கு டிப்பர்களையும் கிளிநொச்சி நீதிமன்றில் நேற்று முற்படுத்திய பொலிஸார் சாரதிகள் நால்வரையும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளதாக தெரிவித்தனர். (நி-5-6-316)

## பாலிநகர் வீதி புனரமைப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப் பட்ட நிதியில் பாலிநகர் 30 வீட்டுத்திட்ட வீதி பிரதேசசபையினால் புனரமைக்கப்பட்டு வருகிறது

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியில் மக்கள் போக்குவரத்தினை. பாதுகாப்பாகவும் இலகுவாகவும் மேற்கொள்ள மூன்று வீதிகள் அமைப்பதற்கு 3 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் தற்போது பாலிநகர் 30 வீட்டுத்திட்ட வீதி கேள்வி அறிவித்தல் மூலம் ஒப்பந்ததாரர்களை தெரிவு செய்து ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு சபை செயலாளர் செ.செல்வகுமார் வழிகாட்டலின் கீழ் சபை தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வையில் வீதி அமைத்தல் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (நி-5-6-315)




# ஆபத்தான மரம் அகற்றப்பட்டது



(தருமபுரம்)

தருமபுரம் மருத்துவமனைக்கு அருகாமையில் பாதுகாப்பற்ற நிலையில் இருந்த ஆலமரம் அகற்றப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தருமபுரம் மருத்துவமனைக்கு அருகாமையில் பாதுகாப்பற்ற நிலையில் மரம் ஒன்றின் கிளை முறிந்த நிலையில் ஏனைய கிளைகள் வீதியில் போக்குவரத்துக்கு ஆபத்தாக இருப்பதாக வலம்புரிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட செய்தியை அடுத்து குறித்த மரம் அகற்றப்பட்டுள்ளது.

நேற்று கிளிநொச்சி மாவட்ட மரக்கூட்டுத்தாபனம் மற்றும் கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஜீவராசா நிதி உதவியுடன் வீதிஓரமாக நின்ற மரம் பாதுகாப்பாக முற்று முழுதாக அகற்றப்பட்டுள்ளது. (நி-5-6-316)



நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கும் தபால் ஊழியர்களின் தொழிற்சங்க போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தன், பூநகரி மற்றும் மன்னார் மாவட்ட பிரதான தபாலகங்கள் மூடப்பட்டு காணப்பட்டன.

(படம்- யதுபாஸ்கரன்.ஜோசப்நய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 330





ஆனால் உன்னிடம் எல்லாவற்றையும் சொல்லப் போகிறேன். நம்முடைய குடும்பத்தில் யாராவது ஒருவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். உன் தாயாரிடம் சொல்ல முடியாது. உன்னிடந்தான் சொல்ல வேண்டுமென்று சில காலமாகவே எண்ணியிருந்தேன். அதற்குச் சந்தர்ப்பம் இன்றைக்கு வந்தது. நீ என் நிலையைக் கண்டு சிரிக்கமாட்டாய். என் மனத்திலுள்ள புண்ணை ஆற்றுவதற்கு முயல்வாய். என்னுடைய விருப்பம் நிறைவேறவும் உதவி செய்வாய்! இந்த நம்பிக்கையுடன் உன்னிடம் சொல்கிறேன்.

"அந்தத் தீவிலிருந்து மரக்கலத்தில் ஏறிப் புறப்பட்டேன் கோடிக்கரை சேர்ந்தேன். என் பாட்டனார் பராந்தக சக்கரவர்த்தி இந்தத் தஞ்சை அரண்மனையில் அப்போது தங்கியிருக்கிறார் என்று அறிந்து நேராக இங்கே வந்தேன்.

"நான் தஞ்சை வந்து சேர்ந்தபோது பராந்தக சக்கரவர்த்தி மரணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார். அவர் உள்ளம் நொந்து போயிருந்தது. நாற்பது ஆண்டு காலத்தில் அவர் நிர்மாணித்த மகாராஜ்யம் சின்னா பின்னம் அடைந்து கொண்டிருந்தது. அவருக்குப் பிறகு பட்டத்தை அடைய வேண்டியவரான இராஜாதித்தர் தக்கோலப் போரில் மாண்டார். அதே போர்க்களத்தில் படுகாயம் அடைந்த என் தந்தை அரிஞ்சயர் பிழைப்பாரோ, மாட்டாரோ என்ற நிலையில் இருந்தார். கன்னர தேவனுடைய படைகள் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றி முன்னேறிக் கொண்டு வந்தன. தெற்கே பாண்டியர்கள் தலையெடுத்து வந்தார்கள். இலங்கையில் சோழ சைன்யம் தோல்வியுற்றுத் திரும்பி விட்டது. பல போர்க்களங்களிலும் சோழ நாட்டு வீராதி வீரர் பலர் உயிர் துறந்து விட்டார்கள். இந்தச் செய்திகள் எல்லாம் ஒருமிக்க வந்து முதிய பிராயத்துப் பராந்தக சக்கரவர்த்தியின் உள்ளத்தைப் புண்படுத்தித் துயரக் கடலில் ஆழ்த்தியிருந்தன. இந்த நிலையில் என்னைக் கண்டதும் அவருடைய முகம் மலர்ச்சி அடைந்தது. என் பாட்டனாருக்கு நான் குழந்தையாயிருந்த நாளிலிருந்து என் பேரில் மிக்க பிரியம். என்னை எங்கேயும் அனுப்பாமல் அரண்மனையில் தம்முடனேயே வெகுகாலம் வைத்திருந்தார். பிடிவாதம் பிடித்து அவரிடம் விடை பெற்றுக் கொண்டு நான் ஈழ நாட்டுக்குப் போனேன். அங்கிருந்து திரும்பி வந்தவர்களிலே நான் இல்லை என்று அறிந்ததும் என் பாட்டனாரின் மனம் உடைந்து போயிருந்தது. நான் இறந்து விட்டதாகவும் தெரியவில்லையாதலால் என்னைத் தேடிவரக் கூட்டங் கூட்டமாக ஆட்களை அனுப்பிக் கொண்டிருந்தார்.

"கடைசியில் ஒரு கூட்டம் என்னைக் கண்டுபிடித்தது. நான் தஞ்சை வந்து சேர்ந்ததும், புண்பட்ட அவர் மனத்துக்குச் சிறிது சாந்தி ஏற்பட்டது. அவருடைய அந்திய காலத்தில் வீழ்ச்சியடைந்து வந்த சோழ சாம்ராஜ்யம் மறுபடியும் என்னால் மேன்மையடையும் என்பதாக எப்படியோ அவர் மனத்தில் ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. அந்த நம்பிக்கையைச் சோதிடர்கள் வளரச் செய்திருந்தார்கள். அதற்குத் தகுந்தாற்போல், அவருக்குப் புதல்வர்கள் நாலு பேர் இருந்தும், அவருடைய அந்திய காலத்தில் பேரன் நான் ஒருவனே இருந்தேன். சக்கரவர்த்தி இறக்கும் தறுவாயில் என்னை அருகில் அழைத்து உச்சி முகர்ந்து கண்ணீர் பெருக்கினார். 'அப்பனே! எனக்குப் பிறகு உன் பெரியப்பன் கண்டராதித்தன் சிம்மாசனம் ஏறுவான். அவனுக்குப் பிறகு இந்தச் சோழ ராஜ்யம் உன்னை அடையும் உன்னுடைய காலத்திலேதான் மறுபடி இந்தச் சோழ குலம் மேன்மையடையப் போகிறது' என்று பலமுறை அவர் கூறினார்.

"சோழ நாட்டின் மேன்மையை நிலை நாட்டுவதே என் வாழ்க்கையின் இலட்சியமாயிருக்க வேண்டுமென்று சொல்லி, அவ்வாறு என்னிடம் வாக்குறுதியும் பெற்றுக்கொண்டார்.

(தொடரும்...)




# சிறுவர் அரங்கம்

## இதெல்லாம் எதுக்கம்மா

தாய் ஒட்டகமும் குட்டி ஒட்டகமும் ஒரு மாலைப் பொழுதில் உலாத்திக் கொண்டிருந்தன.

குட்டி ஒட்டகம் படு சுட்டி. சதா வாய் ஓயாமல் கேள்வி கேட்டுக் கொண்டே இருக்கும். அன்றைக்கும் அப்படித்தான்.



"அம்மா! நமக்கு மட்டும் முதுகில் திமில் இருக்கே. ஏனம்மா?"

தாய் எப்போதும் பொறுமையாக பதில் சொல்லும்.

"நாமெல்லாம் இயல்பாகப் பாலை வனத்தில் வாழ்பவர்கள் இல்லையா! பாலை வனத்தில் தண்ணீர் பாலைவனச் சோலைகளில் மட்டும்தான் கிடைக்கும். தினம் தினம் கிடைக்காது. கிடைக்கும் தண்ணீரை முடிந்த மட்டும் நம் உடம்பில் சேமித்து வைத்துக் கொண்டு வேண்டும் போது உபயோகப் படுத்திக் கொண்டால் தண்ணீர் கிடைக்காத பாலைவனத்தில் பல நாள் சுற்றித் திரியவே நமக்கு இயற்கை திமிலைக் கொடுத்திருக்கு"

குட்டி திரும்பவும் கேட்டது. "அப்போ நமக்கு கண் இமை கெட்டியாக இருக்கே, மூக்கை மூடிக் கொள்ள மூடி இருக்கே? மத்த மிருகத்துக்கு அப்படி இல்லையே. அது ஏன்"

தாய் ஒட்டகம் வாயை அசை போட்டுக் கொண்டு சொன்னது.

"பாலைவனத்தில் மணல் புயல் அடிக்கும், அப்போ சட்டுன்னு ஒதுங்க இடம் கிடைக்காது. கண்ணுக்கும் மூக்குக்கும் பாதுகாப்பா மூடி இல்லைன்னா கண்ணுலயும் மூக்குலையும் மணல் போயிடுமே. அதனால் தான் நமக்கெல்லாம் இப்படி மூடி இருக்கு"

குட்டி இப்போது அம்மாவின் கால் குளம்பைப் பார்த்துக் கேட்டது. "இவ்வளவு பெரிய குளம்பு நமக்கு எதுக்கு?"

"அது கண்ணு, மணல்ல நடக்கும் போது நம்ம கால் மணல்ல புதையாம நடக்கத் தான்". பொறுமையாக பதில் சொன்னது அம்மா ஒட்டகம்.

"பல்லும் நாக்கும் இவ்வளவு கெட்டியா, தடியா இருக்கே. அது ஏன்?". இது குட்டி யோசனையுடன்கேட்ட கேள்வி.

அம்மா ஒட்டகம் சொன்னது. "பாலைவனத்தில் செடி கொடியெல்லாம் முரட்டுத்தனமாக இருக்கும். அதை யெல்லாம் கடித்துச் சவைத்துத் தின்ன வேண்டாமா?"

இப்போது குட்டி பட்டென்று கேட்டது. "அம்மா! இதையெல்லாம் வைத்துக் கொண்டு லண்டன் குளிரிலே இந்த மிருகக் காட்சிசாலையிலே நாமரெண்டு பேரும் என்ன செஞ்சுகிட்டு இருக்கோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் முன்னேற்றப் பாதையில் செல்வதே நம்மவர்களையும் முன்னேறச் செய்ய சிறந்த வழி.
– ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அன்பார்ந்த பெற்றோர்களே! பிள்ளைகள் பக்குவம்

உலகப் புகழ்பெற்ற நடிகர் அமிதாப்பச்சனை ஓர் ஊடகவியலாளர் செவ்வி காண்கிறார்.

இந்தியாவின் உச்சமான செல்வந்தர்களில் ஒருவரான அமிதாப் பச்சனிடம் அந்த ஊடகவியலாளர்; உங்களின் மதிப்பிட முடியாத செல்வம் எது எனக் கேட்கிறார்.

அதற்கு அவர் எனது இரண்டு பிள்ளைகளுமே என் உன்னதமான செல்வம் எனப் பதிலளிக்கிறார்.

ஆம், இந்த உலகில் பிள்ளைச் செல்வங்களுக்கு இணையான செல்வம் எதுவுமிருக்க முடியாது. பெற்றோர்களின் அத்தனை பாடுகளும் பிள்ளைகளுக்கானது.

பிள்ளைகளைப் படிப்பித்து ஆளாக்க வேண்டும் என்பதில் பெற்றோர்களின் நினைவுகளை அளவிடவே முடியாது.

தங்களை ஒறுப்பனவு செய்து பிள்ளைகளைப் படிப்பித்து ஆளாக்க வேண்டும் என்ற பெற்றோர்களின் உள்ளக்கிடக்கையை எத்தனை பிள்ளைகள் உள்ளத்தால் உணர்ந்துள்ளனர் என்பதுதான் புரியாமல் உள்ளது.

உண்மை. பெற்றோர்கள் படாப்பாடுபட்டு தங்கள் உடலை வருத்தி உழைத்து பிள்ளைகளின் கல்விக்காகப் பணத்தைச் செலவிடுகின்றனர்.

என் பிள்ளையைப் படிப்பித்து ஆளாக்க வேண்டும் என்ற பெற்றோரின் உள்ளக்கிடக்கையைப் புரிந்து கொள்கின்ற பிள்ளைகள் நிச்சயம் பெற்றோரின் கனவை நனவாக்குவர்.

தங்களுக்காகத் தமது தாயும் தந்தையும் எத்துணை கஷ்டங்களை அனுபவித்தனர் என்பதை அந்தப் பிள்ளைகள் தங்கள் வாழ்நாள் முழுவதிலும் மறக்க மாட்டார்கள்.

ஆனால் தங்களுக்காகத் தமது பெற்றோர்கள் படுகின்ற கஷ்டங்களை புரிந்து கொள்ளாத பிள்ளைகள் படிப்பு என்ற பேரில் பெற்றோரின் உழைப்பையும் தங்களின் அருமந்த நேரத்தையும் விரயமாக்குகின்றனர்.

இதிலும் ஒரு பகுதியினர் தவறான பாதையில் பயணிக்கத் தலைப்பட்டு தங்களின் பொன்னான எதிர்காலத்தை தொலைத்து விடுகின்றனர்.

ஆம், இப்போதெல்லாம் எங்கள் இளம் பிள்ளைகளின் வாழ்வியலை திரைப்படங்கள் ஆக்கிரமித்துள்ளன.

கற்பனையிலும் எட்டாத சினிமாப் படங்களை நிஜமாக நினைக்கின்ற இளம் பிள்ளைகளை வழிப்படுத்துவதும் பாதுகாப்பதும் பெற்றோர்களின் தலையாய கடமை.

எனினும் பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மீது அபரிதமான நம்பிக்கையை கொண்டிருப்பதால், தங்கள் பிள்ளைகளை அவர்கள் அவதானிப்பதில்லை. அவர்களுடன் சேர்ந்திருந்து கதைப்பதில்லை. பெற்றோர்களின் இந்த நம்பிக்கையை இம்மியும் புரிந்து கொள்ளாத பிள்ளைகள் சிலர் தாய், தந்தையரின் நம்பிக்கையில் மண்ணை அள்ளிக் கொட்டி விடுகின்றனர்.

எனவே அன்பார்ந்த பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகள் பெறுமதியானவர்கள். அவர்களுக்கு உங்களை விட்ட உயர் பாதுகாப்பு வேறுயாருமாக இருக்க முடியாது.

ஆகையால் அவர்களை கண்காணியுங்கள். அவர்களின் பாதுகாவலர்களாக இருங்கள். அவர்கள் எங்கு சென்றாலும் அந்தத் தகவலை உங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருங்கள். ஏனெனில் இந்த உலகம் மிகவும் மோசமானது.

# மீண்டும் வேகமெடுக்கும் டெங்கு நோய்ப் பரவல்

## மேலும் நால்வர் உயிரிழப்பு

(கொழும்பு)

**இந்த ஆண்டு (2023) இதுவரை டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 70,000 ஐ தாண்டி உச்சத்தை அடைந்துள்ளது. அதுமாத்திரமல்லாமல் டெங்கு நோயினால் 4 மரணங்களும் பதிவாகியுள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.**

இவற்றுடன் சேர்த்து இந்த ஆண்டிற்கான மொத்த இறப்புகளின் எண்ணிக்கையும் 43 ஆக உயர்ந்துள்ளது.

இந்த வருடம் நேற்று வரை, 70,178 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர், நவம்பர் மாதத்தின் 1-8 ஆம் திகதிக்கிடையில் 1,685 டெங்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தற்போது நிலவும் மழையுடன் கூடிய கால நிலையின் காரணமாக டெங்கு நோய்த் தொற்று அதிகரித்து வருவதாகவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், டெங்குக் காய்ச்சலைத் தடுக்கும் நடவடிக்கைகளை மக்கள் முன்னெடுக்க வேண்டும் என்றும் சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்துக்கொள்வதன் மூலம் நுளம்பு உற்பத்தியினைத்தடுக்க வேண்டும் எனவும் சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர். (நி-5-6)

# 'அஸ்வெசும' திட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க பிரதேச செயலாளர்கள் சங்கம் இணக்கம்

(கொழும்பு)

அஸ்வெசும நலன்புரி திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கான ஆதரவை வழங்குவதற்கு இலங்கை பிரதேச செயலாளர்கள் சங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

அஸ்வெசும நலன்புரி திட்டம் தொடர்பில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இணக்கப்பாடு எட்டப்பட்டதாக இலங்கை பிரதேச செயலாளர்கள் சங்கத்தின் செயலாளர் பிரதீப் ரத்நாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, அஸ்வெசும திட்டத்தை நேரத்தியாக முன்னெடுத்துச் செல்வதற்கு கிராம மட்டத்தில் அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள், பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட நான்கு பிரிவுகளின் கீழ் நலன்புரி திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் முதியோர் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கும் வழமை போன்று கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# ஓய்வூதிய சீர்திருத்தம் அனுமதி பெற நடவடிக்கை

## பிரதமர் தினேஷ் குணவர்தன

(கொழும்பு)

ஓய்வூதிய சீர்திருத்தத்திற்கான ஏற்பாடுகளை ஒதுக்கி அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டு அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்து வருவதாக பிரதமர் மற்றும் அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஷ் குணவர்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

31.12.2015 இற்கு முன்னர் மற்றும் 01.01.2016 முதல் 01.01.2020 வரை ஓய்வு பெற்ற அனைத்து ஓய்வூதியர்களுக்கும் ஓய்வூதிய திருத்தத்திற்காக வருடாந்தம் 67,608 மில்லியன் ரூபாய் தேவைப்படுவதாக அவர் தெரிவித்தார்.

மாநில நிர்வாக சுற்றறிக்கை 3 இன் கீழ் 2016 இன் விதிகளின்படி, இரண்டு நிகழ்வுகளில் ஓய்வூதியங்களை திருத்துவதற்கு அரசாங்கத்தால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் நிதி மற்றும் பொருளாதார சிக்கல்களை எதிர்கொண்டு, போதுமான நிதி ஒதுக்கீடுகளை ஒதுக்க முடியவில்லை. அது அரசாங்கத்தின் முன்னுரிமைகள் மாறிவிட்டன, மேலும் அனைத்து ஓய்வூதியதாரர்களும் போதுமான நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்ற அரசாங்கத்தின் கொள்கை யால் சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளது. ஆனால் எந்தத் தவறும் இல்லை என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# பொலிஸ்மா அதிபர் நியமனம் அரசியலமைப்பிற்கு முரணானது

## சுமந்திரன் எம்.பி

(கொழும்பு)

இலங்கை அரசியலமைப்புக்கு தற்போதைய பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்படவில்லை என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க சட்டத்துக்குட்படாது இந்த நடவடிக்கையை முன்னெடுத்து அரசியலமைப்பை மீறியுள்ளதாக நேற்றைய பாராளுமன்ற அமர்வின் போது சுமந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் அரசியலமைப்பை ரணில் விக்கிரமசிங்க மீறியுள்ளார். இது ஒரு சுட்டிக் காட்டத்தக்க குற்றம்.

அத்துடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய 3 சட்டங்கள் உள்ளன. இதில் இரண்டு சட்டங்களை நிறைவேற்ற முடியும்.

எனினும், ஒரு சட்டத்தை நடைமுறைப்படுத்த பாராளுமன்ற விவாதம் தேவைப்படுகிறது.

இதன்படி, நீதிமன்ற அவமதிப்பு சட்டமூலத்தில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டிய சில முக்கிய விடயங்கள் இருக்கின்றன. இதனால் குறித்த சட்டத்தை நிறைவேற்ற நாம் அனுமதிக்க மாட்டோம் என அவர் தெரிவித்தார். (நி-5-6)

# ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவாரா ரமேஷ் பத்திரண?

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் எந்தவொரு முடிவையும் இதுவரை எடுக்கவில்லை என சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

மேலும் தான் இன்னும் மொட்டுக் கட்சியிலேயே அங்கம் வகிப்பதாகவும் அவர் கட்சி மாற்றம் குறித்து எந்த முடிவையும் இன்னும் எடுக்கவில்லை.

கட்சி எடுக்கும் முடிவின் பிரகாரமே எனது தீர்மானம் அமையும் எனவும் தெரிவித்தார்.

நாடு நெருக்கடியான சூழலில் இருந்த போதே ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றார். ரணிலை கட்சி ஆதரிக்க முடிவெடுத்தால் அந்த முடிவை நான் ஏற்பேன் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி-5-6)

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2023
'மரங்களை நேசிக்காத எவரும் இறைவனை நேசிப்பவர்கள் அல்லர்'
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலைதீவில் 'இந்தியாவே வெளியேறு' முழக்கத்துடன் சீனசார்பு முகமது முய்ஜு ஜனாதிபதியாகத் தெரிவு



04

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

அவரது தேர்தல் அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சியின் ஒரு காலகட்டமாகக் கருதப்பட்டது. ஏனெனில் மௌமூன் பின்தங்கிய தீவுகளை அபிவிருத்தி செய்வதற்கு முன்னுரிமை அளித்தார்.

இக்காலகட்டத்தில் சுற்றுலா வளர்ச்சியடைந்தது மற்றும் வெளிநாட்டு தொடர்பு அதிகரித்தது வளர்ச்சியை நோக்கிப் பயணித்தது.

இருப்பினும், மௌமூனின் (கையூம்) ஆட்சி சர்ச்சைக்குரியதாக இருந்தது. சில விமர்சகர்கள் மௌமூன் ஒரு எதேச்சதிகாரர் என்று கூறி, அவர் சுதந்திரத்தை வரம்புகுட்படுத்துவதன் மூலமும், அரசியல் அதிகாரத்தின் மூலமும் கருத்து வேறுபாடுகளை அடக்கினார் என்று கருதப்பட்டது.

நசீர் ஆதரவாளர்கள் மற்றும் வணிக நலன் விரும்பிகளால் (1980 மற்றும் 1983 இல்) தொடர்ச்சியான ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சிகள் செய்யப்பட்டன. அரசாங்கத்தைக் கவிழ்க்கமுயன்ற இம் முயற்சிகள் யாவும் தோல்வி அடைந்தன.

மாலைதீவு இந்தியாவுக்கு மட்டுமல்ல இலங்கைக்கும் அருகிலுள்ள நாடு. இதை மனதில் கொண்டு தான் இந்தியா, மாலைதீவுடனான நல்லுறவைத் தொடர வேண்டியிருந்தது. 1988 நவம்பர் மாதம் இலங்கையிலிருந்து ஆயுதங்களுடன் ஒரு இலங்கைப் போராளிக் குழு (PLOTE) மாலதீவில் ஊடுருவியது.

மாலே நகரிலுள்ள விமான நிலையத்தை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்கள். அவர்களது மற்றொரு முக்கிய நோக்கம் அதிபர் மௌமூன் அப்துல் கையூமைக் கைது செய்வது'. ஆனால், அதை அவர்களால் செய்ய முடியவில்லை. காரணம், அவர் இந்தியாவில் தஞ்சம் புகுந்துவிட்டார்.

அப்போது இந்தியப் பிரதமராக இருந்தவர் ராஜீவ் காந்தி. மாலைதீவு அரசுக்கு ஆதரவாக ராணுவ வீரர்களை அனுப்பி வைத்தார். அடுத்த சில மணி நேரங்களிலேயே மாலைதீவு அரசைப் பற்றியிருந்த ஆபத்து நீங்கியது. போராளிகளை இந்திய ராணுவம் ஒடுக்கியது. இந்தியாவுக்கு பாராட்டுகள் குவிந்தன. அப்போதைய அமெரிக்க அதிபர் ரீகன், "இந்தியப் பெருங்கடல் பகுதியின் அமைதி நிலவை இந்தியா மதிக்கத்தக்க பங்களிப்பைச் செய்திருக்கிறது" என்றார். தலைநகர் மாலேவில் இந்திரா காந்தி நினைவு மருத்துவமனை எழுப்பப்பட்டது.

இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட நிலநடுக்கத்தைத் தொடர்ந்து, 2004 டிசம்பர் 26 அன்று சுனாமியால் மாலைத்தீவு பேரழிவிற்குள்ளானது. ஒன்பது தீவுகள் மட்டுமே வெள்ளத்தில் இருந்து தப்பியதாகக் கூறப்பட்டது. ஐம்பத்தேழு தீவுகள் முக்கியமான உள்கட்டமைப்புக்கு கடுமையான சேதத்தை எதிர் கொண்டன. பதினான்கு தீவுகள் முற்றிலும் சேதமுற்றது. மேலும் ஆறுதீவுகள் அழிக்கப்பட்டன.

மௌமூனின் ஆட்சியின் பிற்பகுதியில், மாலைத்தீவில் சுதந்திரமான அரசியல் இயக்கங்கள் தோன்றின. அது அப்போது ஆளும் மாலைதீவு மக்கள்கட்சிக்கு (MPP) சவால் விடுத்து ஜனநாயக சீர்திருத்தத்தைக் கோரியது. அதிருப்தி பத்திரிகையாளரும் ஆர்வலருமான முகமது நஷீத் 2003 இல் மாலைதீவு ஜனநாயகக் கட்சியை (MDP) நிறுவினார். அதன் மூலம் படிப்படியாக அரசியல் சீர்திருத்தங்களை அனுமதிக்க மௌமூனுக்கு அழுத்தம் கொடுத்தார்.

2008 இல், ஒரு புதிய அரசியலமைப்பு அங்கீகரிக்கப்பட்டது மற்றும் முதல் நேரடி ஜனாதிபதித் தேர்தல்கள் நடந்தன. அத் தேர்தலின் இரண்டாவது சுற்றில் நஷீத் வெற்றி பெற்றார்.

## முகம்மதுநசீது (Mohamed Nasheed)

2008இல் பொதுத் தேர்தலில் கையூமை தோற்கடித்து முகம்மது நஷீத் குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் மாலைத்தீவு ஜனநாயகக்கட்சியைச் சேர்ந்தவர். முகம்மதுநசீது (Mohamed Nasheed) மாலைத்தீவுகளில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது அரசுத் தலைவரும் மாலைதீவு ஜனநாயகக் கட்சியின் நிறுவனர்களில் ஒருவரும் ஆவார். 2008 அரசுத்தலைவர் தேர்தலின் முதற் கட்ட வாக்கெடுப்பில், முகம்மதுநசீது 25% வாக்குகளைப் பெற்றார். அதன் பின்னர் 30 ஆண்டுகளாகப் பதவியில் இருந்த மாமூன் அப்துல்கயூமிற்கு எதிரான பொது எதிர்க்கட்சி வேட்பாளராக நிறுத்தப்பட்டு வெற்றி பெற்றார். நசீது 2008 நவம்பர் 11 இல் அரசுத் தலைவராகப் பதவியேற்றார். ஆனாலும் நீடை எதிர்க்கும் அரசியல் கட்சிகள் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டிருந்ததால் அவருக்கு அரசியல் ரீதியாக பெரும் நெருக்கடி இருந்து வந்தது.

முந்தைய அரசாங்கம் விட்டுச் சென்ற பெரும் கடன், 2004 சுனாமியைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதாரச்சரிவு, உள்ளூர் கரன்சி (ரூஃபியா) அதிகமாக அச்சிடுதல், வேலை யில்லாத்திண்டாட்டம், ஊழல் மற்றும் போதைப்பொருள் பயன்பாடு அதிகரிப்பு உள்ளிட்ட பல சவால்களை அவரது நிர்வாகம் எதிர்கொண்டது.

நாட்டில் முதன்முறையாக பொருட்கள் மீதான வரி விதிக்கப்பட்டது, மேலும் பல பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான இறக்குமதி வரி குறைக்கப்பட்டது. யுனிவர்சல் ஹெல்த் இன்சூரன்ஸ் (Universal health insurance) மற்றும் சமூக நலப் பலன்கள் 65 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்கள், ஒற்றைப் பெற்றோர் மற்றும் சிறப்புத் தேவைகள் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டது.

2011-12 இல் எதிர்க்கட்சிகள் இஸ்லாத்தை பாதுகாக்கும் பெயரில் நசீதுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் இறங்கின. இராணுவத்தினரும் காவல்துறையினரும் இதில் இணைந்துகொண்டனர். இதனைஅடுத்து 2012 பெப்ரவரி 7 இல் நசீது பதவியில் இருந்து விலகினார்.

இராணுவத்தினரால் தான் துப்பாக்கி முனையில் பதவியில் இருந்து விலகுவதற்கு வற்புறுத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார். கயூமின் செல்வாக்கு மிக்க ஆதரவாளர்களின் உதவியுடன் இராணுவப் புரட்சி மூலம் அவர் பதவியில் இருந்து விலகியதாகத் தெரிவிக்கப்பட்டது. இவருக்கு அடுத்ததாக பதவிக்கு வந்த நசீதின் துணை அதிபராக இருந்த முகமதுவாகித்அசன் இக் குற்றச்சாட்டுகளை மறுத்தார். இது குறித்து விசாரணை செய்த மாலைதீவு தேசியவிசாரணைகள் ஆணைக் குழு நசீதின் குற்றச்சாட்டில் எவ்வித ஆதாரமும் இல்லை எனக் கூறியது.

அவர் பதவியில் இருந்த போது குற்றவியல் நீதிமன்ற நீதிபதி அப்துல்லாமுகம்மது என்பவரைக் கைதுசெய்தமைக்காக, பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின்கீழ்நசீது 2015 மார்ச்சில்கைதுசெய்யப்பட்டு, 13 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. பன்னாட்டு மன்னிப்பு அவை இதனை "அரசியல் பழிவாங்கல்" எனக் குற்றஞ்சாட்டியது. ஐக்கிய அமெரிக்கஅரசுச் செயலகம் "விசாரணையின் போது பொருத்தமான குற்றவியல் நடைமுறைகள் இல்லாதது" குறித்துக் கவலை தெரிவித்தது. இந்தியாவும் இது குறித்து வருத்தம் தெரிவித்தது.

2016 இல், நசீது மருத்துவசிகிச்சைக்காக ஐக்கிய இராச்சியம் சென்ற போது, அவருக்கு அந்நாடு அரசியல் புகலிடம் அளித்தது.சட்ட ரீதியான தடைகளைச் சுட்டிக்காட்டி அரசுத்தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்கான தனது திட்டங்களை அவர் கைவிட்டார். கட்சியின் முதன்மை வாக்கெடுப்பில் தனது வெற்றியை நிராகரிக்க தேர்தல் ஆணையம் எடுத்த முடிவு சட்ட விரோதமானது என்று அவர் தெரிவித்தார்.

2018 அரசுத்தலைவர் தேர்தலில், நசீதின் இளமைக்கால நண்பரும், கட்சியின் வேட்பாளருமான இப்ராகிம் முகமது சோலிஹ் வெற்றி பெற்றதை அடுத்து, நசீது நாடு திரும்பினார். 2019 பாராளுமன்றத் தேர்தலில் மச்சங்கோலிமேது தொகுதியில் போட்டியிட்டு 1,054 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அதை அடுத்து அவர்பாராளுமன்ற சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2021 மே 6 இல், நசீது அவரது வீட்டுக்கருகில் தனது வாகனத்தில்ஏறும் போது அவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதில் படுகாயமுற்றார்.

இவர் ஒரு கடல்வாழ் உயிரின விஞ்ஞானி. சுற்றுச்சூழல் தொடர்பான செயற்பாடுகளில் நிறைய ஆர்வம் காட்டினார். சுறா வேட்டைக்குத் தடை விதித்தார். அரசு நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்பட்டன. "உயர்ந்து கொண்டிருக்கும் கடல் மட்டத்தில் அழியும் முதல் பகுதியாக மாலைத்தீவு இருக்கலாம்"என்று ஆய்வுகள் சொன்னது. இதனால், தடுப்பு நடவடிக்கைக்கு நிதி உருவாக்கினார். இவர் 3 வருடம் 88 நாட்கள் ஆட்சி செய்தார்.

## முகமதுவாகித்ஹசன்

முகமதுவாகித்ஹசன் (Mohammed Waheed Hassan) மாலைதீவுகளின்முன்னாள் அரசுத் தலைவரும் மாலைதீவுகள் தேசிய பாதுகாப்புப்படையின் முதற் பெரும் படைத் தலைவரும்ஆவார். 2012 பெப்ரவரி 7 ஆம்நாள் முகமது நசீது அரசுத் தலைவர் பதவியைத்துறந்ததை அடுத்து வாகித் அசன்புதிய அரசுத்தலைவராகப் பதவியேற்றார். அவர் ஒரு வருடம் 283 நாட்கள் அப் பதவியில் இருந்தார். இவர் 2008 முதல் 2012 ஆம் ஆண்டு வரையில் நாட்டின் பிரதி அரசுத் தலைவராக பதவியில் இருந்தவராவர். யுனிசெப்பின் முதுநிலை உறுப்பினராகப் பதவியில் இருந்த வாகித் அசன்கலிபோர்னியாவின் ஸ்டான் போர்டு பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றவர்.

2013 ஆம் ஆண்டின் இறுதியில் நடைபெற்ற தேர்தல்கள் கடும் போட்டியைசந்தித்தன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுமார்...

நிதியமைச்சருமான ரணில் விக்கிரம சிங்க அறிவித்து பின்னர் அது தொடர்பில் அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

அதன்படி, ஜனவரி முதல் சுமார் 15 லட்சம் அரச ஊழியர்களுக்கு இந்த சம்பள உயர்வு கிடைக்க வாய்ப்புள்ளது. (ம-7)

## பாராளுமன்றில்...

கூட்டம் நேற்று இடம்பெற்றபோதே இந்த தீர்மானம் எட்டப்பட்டது.

பாராளுமன்றத்தில் விவாதமொன்றை நடத்தி, பாராளுமன்றத்தில் இன்று வாக்கெடுப்பொன்றை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கை கிரிக்கெட்டின் அதிகாரிகளை பதவி நீக்குவது குறித்த வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் இன்று நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## திங்கள்...

விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் விடுத்த கோரிக்கையை அடுத்து, மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யு.கமகே இந்த அனுமதியை வழங்கியுள்ளார்.

இவ்வாறு வழங்கப்படும் விசேட விடுமுறைக்கு பதிலாக எதிர்வரும் சனிக்கிழமை மத்திய மாகாண தமிழ் பாடசாலைகள் நடத்தப்படும் என ஆளுநர் அறிவித்துள்ளார். (ம-7)

## அத்தியாவசிய...

முன்தினம் நள்ளிரவு முதல் இரண்டு நாள் அடையாள வேலைநிறுத்தத்தை ஆரம்பித்துள்ளது.

நுவரெலியா மற்றும் கண்டி தபால் நிலையங்களை விற்பனை செய்யும் திட்டத்தை அரசாங்கம் கைவிட வேண்டும் என அதன் இணை அழைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

தபால் ஊழியர்களின் போராட்டம் காரணமாக நேற்று நாடு முழுவதும் தபால் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

தபால் ஊழியர்கள் உடனடியாக போராட்டத்தை கைவிட வேண்டும் என வலியுறுத்தியுள்ள, தபால் திணைக்களம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தபால் ஊழியர்களின் விடுமுறைகளும் நேற்று முன்தினம் இரவு முதல் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையிலேயே தபால் சேவைகளை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை அமைச்சர் பந்துல குணவர்தன வெளியிட்டுள்ளார். (ம-7)

## மகன் விஷம்...

ழுந்தவராவார்.

உயிரிழந்த நபரின் இரண்டாவது மகன் நேற்று முன்தினம் விஷம் அருந்தியதனால் அதிர்ச்சியில் தந்தையார் மயக்கமடைந்தார்.

இந்நிலையில் அவரை உடனடியாக கோப்பாய் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

பின்னர் பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

விஷம் அருந்திய மகன் உயிர் தப்பிய நிலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார். (ம-7,104)

## 3 பெண்கள்...

நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து குறித்த 23 பேரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த கிராமத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் தமக்குள் முரண்பட்டுக் கொண்டு, தொடர்ந்து மோதலில் ஈடுபட்டு வந்தனர். எதிர்த்தரப்பினரை தாக்குவதும், அவர்களின் வீடுகளை சேதப்படுத்துவதுமாக தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டு வந்தனர்.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த பல்வேறு முறைப்பாடுகளை தொடர்ந்து, கோப்பாய் பொலிஸார் நேற்று சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்து, யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியதையடுத்து அவர்களை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (ம-7)

## யாழில் போதை...

பானம் மாத்திரமே வழங்கப்பட்டதாகவும், ஆனாலும் அங்கு வந்த பலரும் தம் வசம் உயிர்க்கொல்லி போதைப் பொருளை வைத்திருந்ததாக விருந்தில் கலந்து கொண்ட சிலர் தெரிவித்தனர்.

இந்நிலையில் தென்பகுதிகளில் சமூக வலைத்தளங்கள் ஊடாக இவ்வாறான போதை விருந்துக்கு அழைப்பு விடுப்பவர்களுக்கு எதிராகவும் விருந்தில் கலந்து கொண்டவர்களுக்கு எதிராகவும் பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

எனினும் யாழில் இடம்பெற்ற குறித்த விருந்துபசாரம் தொடர்பில் பொலிஸார் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. (ம-7)

## காசாவில்...

பலியாகியுள்ளதாக பாலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, கடந்த 7ஆம் திகதி மோதல் ஆரம்பமானது முதல் காசா பகுதியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10,569 ஆக உயர்ந்துள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இறந்தவர்களில் 4,324 குழந்தைகளும் அடங்கியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இஸ்ரேல் படைகளின் தாக்குதலில் ஹமாஸின் ஆயுதப் பிரிவுத் தலைவர் மொசென் அபு சினா கொல்லப்பட்டதை இஸ்ரேல் பாதுகாப்புப் படை உறுதிப்படுத்தியுள்ளது. (ம-7)

## தமிழ்...

ஒருங்கிணைப்பாளர் க.லவகுசராசா தலைமையில் வடக்கு - கிழக்கிலிருந்து வருகை தந்த பெருமளவிலான மக்களின் பங்கேற்புடன் நல்லூர் கிட்டு பூங்காவில் நேற்றுக் காலை இந்த நிகழ்வு நடைபெற்றது.

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் கடந்த 2022ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்கான கௌரவமான அரசியல் தீர்வு நாள் செயல்முனைவின் இறுதி நாளான 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் திகதி வடக்கு - கிழக்கு மக்களுக்கான அரசியல் தீர்வாக "ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு வேண்டும்" எனும் மக்கள் பிரகடனம் வெளியிடப்பட்டிருந்தது.

இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டு ஓராண்டு பூர்த்தி நாளான நேற்று வடக்கு - கிழக்கு மக்களின் பங்கேற்புடன் "இலங்கையின் வடக்கு - கிழக்குத் தமிழரின் இணைப்பாட்சி (சமஷ்டி) கோரிக்கையின் தோற்றம்" எனும் கண்காட்சியும் வரலாற்றுத் தெளிவூட்டல் நிகழ்வும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள், வடக்கு - கிழக்கு வாழ் பொது மக்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், பாதிக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழிற் சங்கப் பிரதிநிதிகள், மனித உரிமை பாதுகாவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ம-7)


கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3534
சீட்டிழுப்பு திகதி 08.11.2023
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 14 19 38 72
V 70299
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.11.08
சீட்டிழுப்பு இலக்கம் - 1322
H 01 07 46 63 H
Double Chance 04490

லக்கி 7
திகதி 08.11.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0118
L7 இலக்கம் 3 2
வெற்றி இலக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 2 6 9 7 7 6

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.11.08
சீட்டிழுப்பு இலக்கம் 0601
கும்பம் 31 42 51 52 கும்பம்
18291 23

மெகா பவர்
திகதி 08/11/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1640
P 04 21 33 62 76
33663

மஹஜன சம்பத
திகதி 2023/11/08
சீட்டிழுப்பு இலக்கம் 5292
W 4 0 6 5 6 8

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2266 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.11.08 தினம் புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 02 15 22 39 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,157,692.00
DLB

சனிதா
திகதி 2023.11.08 வெற்றி வாரம் 4427
வெற்றி இலக்கங்கள் 22 34 35 72 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,232,404.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3978 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.11.08 தினம் புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 01 18 21 42
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,366,800/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 18 22 25 66 68
1442
2023.11.08 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 462,561,154,20
DLB DEVELOPMENT LOTTERIES

ஜயோதா Jayoda
திகதி 2023.11.08 வெற்றி வாரம் 1972 வர்ணம் மஞ்சள்
18 33 38 48 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,391,204.00
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2092
வர்ணம் : ரோஸ்
சீட்டிழுப்பு திகதி : 2023.11.08
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,703,744/-
05 20 35 50 Y
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17671)

**076 825 7716** (ஆகாஸ்)

**பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்**

யா/பிளவத்தை அ.மி.த.க பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 19.11.2023 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே அனைத்துப் பழைய மாணவர்களையும் குறித்த பொதுக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யா/பிளவத்தை அ.மி.த.க பாடசாலை.
(C-7584)

**Pearson International College**

**Applications are called for English teachers & IELTS tutors**

- Candidates should have minimum HND in English or any other academic qualification in english medium
- previous IELTS score above or equal to 6.5 is recommonded (not necessary)
- Prior teaching experience would be an added advantage
- Weekends and weekdays shifts are available.

(C-7583)

Email your CV within three days of thisadvertisement to Pearsoncollege 2020@gmail.com, admin@picsl.lk

**Call +94 74 188 7878 for more info**

No.21,3rd Lane, Power house Road, Jaffna.

# மின்சாரம் தாக்கியதில் 14 வயது சிறுவன் பலி

திருகோணமலை - நிலாவெளி பொலிஸ் பிரிவு ஆறாம் கட்டை ஐயப்பன் கோயிலில் பூசை உதவியாளராக கடமை ஆற்றி வந்த 14 வயது சிறுவன் மின்சாரம் தாக்கி நேற்று உயிரிழந்துள்ளான்.

எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மஹற ஜோதி மண்டல பெருவிழா இடம் பெற இருக்கின்ற நிலையில் குறித்த கோயிலில் நிறம் பூசும் வேலைகள் இடம்பெற்று வருகின்றது.

இந் நிலையில், பூசை உதவியாளரான குறித்த சிறுவன் கோயிலுக்கு மேல் மாடிக்குச் சென்று மின் குமிழ்களை பொருத்திக் கொண்டிருக்கின்ற வேளையில் மின்சாரம் தாக்கி உயிரிழந்ததாக விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் டயகம பகுதியைச் சேர்ந்த திருச்செல்வன் லுகநாத் (14 வயது) என தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

# பிரித்தானிய பிரஜை நீரில் மூழ்கி மரணம்

(காலி)

காலி ஹிக்கடுவை நாரிகம கடற்கரையில் நீராடிய 60 வயதுடைய பிரித்தானிய பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் சுற்றுலாக்காக இலங்கைக்கு விஜயம் செய்துள்ள நிலையில் ஹிக்கடுவ பிரதேசத்தில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்துள்ளார்.

இந்நிலையில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் குழுவொன்றுடன் கடற்கரையில் நீராடச் சென்ற இவர் நீரில் மூழ்கிய நிலையில் பிரதேசவாசிகளால் மீட்கப்பட்டுள்ளார்.

பின்னர் குறித்த பிரஜை சிகிச்சைக்காக பலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

**VILLAGE HOTEL**
பஸ் சேவை
**JAFFNA EXPRESS**
AIRPORT PICK UP DROP SERVICE
வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு
வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு
2800/=
(17484)
T.P: **077 544 8503**


**CANADA**
**VISITOR VISA**
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7585)
**0777-068-777**
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

**VISA விண்ணப்பங்கள்**
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
(C-7585)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
**0777-068-777**

**வெல்டர் தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு அனுபவமுள்ள வெல்டர் (welder) தேவை.
தொடர்புகளுக்கு (17810)
**077 326 5026**
**077 944 8109**

12 வருட வெற்றிப்பயணமாக...
**கனடாவில் உயர்கல்வி**
குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி
**WEC COLLEGE**
புதிய உயர்கல்லூரி வளாகம் ஆரியகுளம்,யாழ்ப்பாணம். (17805)
0212 050 988,0217200989
கிளை: சங்கத்தானை,சாவகச்சேரி

**நினைவு வணக்க நிகழ்வு அழைப்பு**



அன்புடையீர்!
21.09.2023 (வியாழக்கிழமை) அன்று கனடாவில் இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

**அமரர் கார்த்திகேசு நாகலிங்கம்**
(ஓய்வுபெற்ற அதிபர்)

அவர்களின் நினைவு வணக்க நிகழ்வு எதிர்வரும் 11.11.2023 (சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் தாங்களும் அந்நிகழ்வில் கலந்து கொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

இல.111, D 10,
உருத்திரபுரம், கிளிநொச்சி. (17806)

இங்ஙனம்
குடும்பத்தினர்

**கருத்தரங்கு**
**A/L 2023 - தமிழ்**
**பா.பத்மநாதன்**
B.A(Hons) (Tamil spl) - 1st class, M.A(Tamil)- 1st class, M.Ed(Hons) -1st class, Dip in Ed
◆ 8 நாட்கள் நடைபெறும்
◆ வெளிமாணவர்களும் கலந்து கொள்ளலாம்
(17809)

| C.C.A | A S C | மொடேண் |
|---|---|---|
| சுன்னாகம் | நாவலர் வீதி, யாழ்ப்பாணம் | சண்டிலிப்பாய் |
| ஆரம்பம் - 10.11.2023 | ஆரம்பம் - 11.11.2023 | ஆரம்பம் - 15.11.2023 |
| (3.00pm - 5.30pm) | (11.00am - 2.00pm) | (3.00pm - 5.30pm) |

**தரமான காணி விற்பனைக்கு உண்டு**
GOLDEN Real Estate

**யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A9 வீதி முகப்புடன் 42 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.**

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு, நன்னீரூற்று
- வடமாகாண சபை, சித்த மருத்துவமனை ஆகியவற்றிற்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
- 18 அடி பாதை
- யாழ். பஸ் நிலையத்திலிருந்து 6 km தூரம்
- நல்லசூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணிவீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் உகந்த இடம்
- பரம்பரைக்காணி, பல வருடகால தோம்பு, தூய உறுதி
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் காலை 06.00 – மாலை 06.00 மணிவரை
- 1 பரப்பின் விலை 24 லட்சம்

(17808)

**077 623 4204**
**076 755 8606**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.